# தினபூமி

thinaboomi.com

சேலம், வெள்ளி, மார்ச் 24, 2023 | சென்னை | மதுரை | திருச்சி | கோவை | நெல்லை | சேலம் | வேலூர் | பாண்டிச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00





**அமெரிக்காவுக்கு சுற்றுலா விசாவில் செல்பவர்கள் பணிபுரிய அனுமதி: புதிய நடைமுறை விரைவில் அமல்**

...2-ம் பக்கம்

**அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு: மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்**

...3-ம் பக்கம்

**கடைசி ஒருநாள் போட்டியில் தோல்விக்கான காரணம் என்ன ? கேப்டன் ரோகித் சர்மா விளக்கம்**

...7-ம் பக்கம்






திருச்சி திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி, ஜம்புகேஸ்வரர் கோவிலில் பங்குனி தேரோட்டம் நேற்று நடந்தது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

### பிரதமர் மோடி குறித்து அவதூறாக பேசிய வழக்கில்

# ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை

## 30 நாட்கள் ஜாமீன் வழங்கி சூரத் நீதிமன்றம் தீர்ப்பு

சூரத், மார்ச் 24-

கடந்த 2019-ம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடியின் பெயர் குறித்து ராகுல் காந்தி அவதூறாக பேசியது தொடர்பாக தொடரப்பட்ட அவதூறு வழக்கில், அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குஜராத் மாநில சூரத் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பளித்துள்ளது. மேலும் இந்த வழக்கில் ராகுல் காந்திக்கு ஜாமீனும் வழக்கப்பட்டுள்ளது. ரூ.10,000 பிணையில் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. சூரத் செஷன்ஸ் நீதிமன்றம் ராகுல் காந்தியின் தண்டனையை 30 நாட்களுக்கு நிறுத்தி வைத்துள்ளது. அதற்குள் அவர் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம்.

**அவதூறு வழக்கு...**

முன்னதாக, காங்கிரஸ் முக்கியத் தலைவரும், வயநாடு எம்.பி.யுமான ராகுல் காந்தி மீது, சூரத்தின் பாஜக எம்எல்ஏ பூர்னேஷ் மோடி குற்றவியல் அவதூறு வழக்குத் தொடர்ந்திருந்தார். அவர் தாக்கல் செய்திருந்த மனுவில், கடந்த 2019 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது, கர்நாடகா மாநிலம் கோலாரில் நடந்த பிரச்சாரத்தில் பேசிய ராகுல் காந்தி, "எல்லா திருடர்களுக்கும் எப்படி மோடி என்பது பொதுவான குடும்பப்பெயராக இருக்கிறது?" என்று பேசியிருந்தார். இதன் மூலம் அவர் ஒட்டுமொத்த மோடி சமூகத்தையும் அவமானப்படுத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

**நீதிமன்றத்தில் ஆஜர்...**

நான்காண்டுகள் பழமையான இந்த அவதூறு வழக்கின் இருதரப்பு வாதங்களையும் கடந்த வாரத்தில் கேட்டு முடித்திருந்த தலைமை நீதித்துறை நீதிபதி ஹெச். ஹெச்.வர்மா, தீர்ப்பை நேற்று (மார்ச் 23 ஆம் தேதிக்கு) ஒத்திவைத்திருந்தார். நேற்று தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில், இதற்காக ராகுல் காந்தி காலையிலேயே சூரத் நகரத்திற்கு வந்திருந்தார். தீர்ப்பு வழங்கப்பட்ட போது அவர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார். இதற்கு முன்பு, தன் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 499, 500 கீழ் தொடரப்பட்ட அவதூறு வழக்கில் வாக்கு மூலம் அளிப்பதற்காக கடந்த 2021 ஆம் ஆண்டு சூரத் நீதிமன்றத்தில் ராகுல் ஆஜராகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**அவதூறு வழக்கு பதிவு.**

கடந்த 2019 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது, அந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பூர்னேஷ் மோடி, ராகுல் காந்தி ஒட்டுமொத்த மோடி சமூகத்தையும் அவமதித்து விட்டார் என்று அவர் மீது அவதூறு வழக்கு பதிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நசுக்கப் பார்க்கின்றன...**

இந்த நிலையில் தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளரும் ராகுலின் சகோதரியுமான பிரியங்கா காந்தி வரோதா, "பயந்து போன அனைத்து அரசு எந்திரங்களும், தண்டனை, பாரபட்சம் போன்றவைகளைத் திணிப்பதன் மூலம் ராகுல் காந்தியின் குரலை நசுக்கப் பார்க்கின்றன. எனது சகோதரன் ஒரு போதும் பயப்பட மாட்டார். அவர் உண்மையைப் பேசி வாழ்பவர், தொடர்ந்து உண்மையை மட்டுமே பேசுபவர். அவர் தொடர்ந்து இந்த நாட்டு மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டே இருப்பார். உண்மையின் சக்தியும், நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் அன்பும் அவருடன் இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

> **உண்மையே எனது மதம்**
>
> தீர்ப்புக்கு பின்னர் அதுகுறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ள ராகுல் காந்தி, "எனது மதம் உண்மை மற்றும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. உண்மையே எனது மதம், அகிம்சையே அதனை அடைவதற்கான பாதை" என்று பதிவிட்டுள்ளார்.

### தமிழகத்தில் 26-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, மார்ச் 24-

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் ஒரு சில இடங்களில் வரும் 26-ம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தென் இந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டலத்தின் கீழடுக்குகளில் கிழக்கு திசை காற்றும், மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுகிறது.

இதன் காரணமாக, இன்று முதல் 26-ம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வரும் 27-ம் தேதி தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை 33-34 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை 33-34 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

### இலங்கை சிறையில் வாடும்

# 28 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, மார்ச் 24-

இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் 28 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

இலங்கைக் கடற்படையினரால் 23-3-2023 அன்று 12 தமிழக மீனவர்கள் அவர்களது இரண்டு விசைப்படகுகளுடன் (IND-TN-08-MM-1802 மற்றும் IND-TN-08-MM-65) கைது செய்யப்பட்டுள்ள சம்பவத்தினை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த ஆண்டில் மட்டும் இது வரை 28 மீனவர்களும், 4 படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரால் நமது மீனவர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருவது மிகுந்த மனவேதனை அளிக்கிறது. நமது மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது தொடர்பாக தமிழக அரசு பல கண்டனக் கடிதங்களை அனுப்பியும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்கிறது. இதனைத் தடுத்து நிறுத்திட இந்திய அரசு தூதரக முயற்சிகளை மேற்கொண்டு வரும் சூழ்நிலையிலும், இந்திய மீனவர்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் கைது நடவடிக்கைகள் அடிக்கடி நடைபெற்று வருகிறது.

பாக் ஜலசந்தி பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமையைப் பறிக்கும் வகையிலான இலங்கை கடற்படையினரின் நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும். மேலும் இது தொடர்பாக உறுதியான மற்றும் காலவரையறைக்குட்பட்ட ஒரு திட்டத்தினை உடனடியாக வகுத்திட வேண்டும். மீன்பிடித் தொழிலை தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களும், அவர்களது படகுகளும் தொடர்ந்து சிறை பிடிக்கப்படும் சம்பவங்கள், மீனவ சமூகத்தினரிடையே கடும் மனவேதனையும் மனச்சோர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலவரப்படி தமிழகத்தைச் சேர்ந்த 104 மீன்பிடி படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையால் விடுவிக்கப்பட்ட 5 மீன்பிடிப் படகுகளும் இன்னும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவில்லை. 16 இந்திய மீனவர்கள் ஏற்கனவே இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், பிரதமர், இவ்விவகாரத்தில் தலையிட்டு, இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 28 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தமிழக சட்டப்பேரவையில்

# ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா மீண்டும் ஒருமனதாக நிறைவேற்றம்

சென்னை, மார்ச் 24-

தமிழக சட்டப்பேரவையில் ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா ஒருமனதாக மீண்டும் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தில் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட சூதாட்டங்களை தடை செய்து, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது. பின்னர் அமைந்த தி.மு.க. அரசு கொண்டு வந்த ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டு ஒழுங்குபடுத்துதல் அவசர சட்ட மசோதாவுக்கு கடந்த ஆண்டு அக்.1-ம் தேதி கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார்.

இதையடுத்து, அக். 19-ம் தேதி சட்டப்பேரவையில், ஆன்லைன் சூதாட்டங்களுக்கு தடை விதிக்கும் மசோதா நிறைவேற்றப்பட்டு, கவர்னருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இது தொடர்பாக கவர்னர் கேட்ட விளக்கங்களுக்கு தமிழக அரசு பதில் அளித்தது. சில மாதங்களாக மசோதாவை கிடப்பில் போட்டு வைத்திருந்த நிலையில், கடந்த 8-ம் தேதி மசோதாவை கவர்னர் திருப்பி அனுப்பினார்.

இதுதொடர்பாக சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறும்போது, "ஆன்லைன் சூதாட்டங்களை தடை செய்யும் சட்டத்தை நிறைவேற்ற, தமிழக சட்டப்பேரவைக்கு அதிகாரம் உள்ளது. வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் மீண்டும் மசோதாவை நிறைவேற்றி, கவர்னருக்கு அனுப்புவோம். இரண்டாவது முறையாக அனுப்பும் போது, அதை கவரனர் நிராகரிக்க வாய்ப்பில்லை என்று தெரிவித்தார்.

இந்நிலையில் ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா நேற்று (மார்ச் 23) சட்டப்பேரவையில் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது. இதன்படி, முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை தாக்கல் செய்து பேரவையில் பேசினார்.

இதன் மீது, தமிழக வாழ்வுரிமை கட்சி எம்எல்ஏ வேல்முருகன், கொமதேக எம்எல்ஏ ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ., ஜவாஹிருல்லா, சிபிஎம் எம்.எல்.ஏ., நாகை மாலி, பாஜக குழுத்தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக குழுத்தலைவர் ஜி.கே.மணி, காங்கிரஸ் குழுத்தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், அ.தி.மு.க. சார்பில் தளவாய் சுந்தரம் ஆகியோர் பேசினர்.

இதனைத் தொடர்ந்து சட்டப்பேரவையில் ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா ஒருமனதாக மீண்டும் நிறைவேற்றப்பட்டது.

### ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா மீதான விவாதம்:

# ஓ.பன்னீர்செல்வம் பேசியதற்கு எடப்பாடி பழனிசாமி எதிர்ப்பு

## சட்டசபையில் சலசலப்பு - அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு

சென்னை, மார்ச் 24-

ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா மீதான விவாதத்தில் ஓ.பி.எஸ். பேசியதற்கு இ.பி.எஸ் எதிர்ப்பு தெரிவித்தார். மேலும் இதை தொடர்ந்து ஏற்பட்ட சலசலப்பை அடுத்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா நேற்று (மார்ச் 23) சட்டப்பேரவையில் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது. இதன்படி, முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவை தாக்கல் செய்து பேரவையில் பேசினார். இதன் மீது, தமிழக வாழ்வுரிமை கட்சி எம்எல்ஏ வேல்முருகன், கொமதேக எம்எல்ஏ ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சி எம்.எல்.ஏ., ஜவாஹிருல்லா, சிபிஎம் எம்.எல்.ஏ., நாகை மாலி, பாஜக குழுத்தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக குழுத்தலைவர் ஜி.கே.மணி, காங்கிரஸ் குழுத்தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், அ.தி.மு.க. சார்பில் தளவாய் சுந்தரம் ஆகியோர் பேசினர்.

அப்போது பன்னீர் செல்வம் பேசுகையில், ஆன்லைன் ரம்மி தடை சட்ட மசோதாவிற்கு அ.தி.மு.க. சார்பில் வரவேற்பை தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.


இதனால் கோபமடைந்த எடப்பாடி பழனிசாமி, ஒவ்வொரு கட்சி சார்பில் ஒருவரை பேச அனுமதித்துவிட்டு, அ.தி.மு.க. சார்பில் இரண்டாவதாக ஓ.பன்னீர்செல்வத்தை பேச அனுமதித்தது ஏன் என சபாநாயகரை நோக்கி கேள்வியெழுப்பினார்.

ஓ.பி.எஸ்.-க்கு பேச வாய்ப்பளித்ததை கண்டித்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தொடர் அமளியில் ஈடுபட்டனர். அப்போது எடப்பாடி பழனிசாமி தரப்பு எம்எல்ஏக்களும் ஓ.பி.எஸ். தரப்பு எம்எல்ஏக்களும் சபாநாயகர் இருக்கை அருகே சென்று முழக்கமிட்டனர். இதன் காரணமாக சட்டசபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

அப்போது ஓ.பி.எஸ். ஆதரவு எம்.எல்.ஏ மனோஜ் பாண்டியன் ஒரு கட்டத்தில் வேட்டியை மடித்து கட்டி அ.தி.மு.க. வினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஓ.பி.எஸ். தான் எதிர்க்கட்சி துணைத் தலைவர் என தெரிவித்தார். அது இன்னும் மாற்றப்படவில்லை என்று கூறினார்.

(கடைசி பக்கம் பார்க்க)


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 139.91 | 44.40 |
| பாயிண்ட் 58214.59 | பாயிண்ட் 17151.9 |




**தங்கம்**
1 சவரன் ₹43,760
1 கிராம் ₹5,470



**வெள்ளி**
1 கிலோ ₹74,000
1 கிராம் ₹74.00

**டாலர்** ₹82.59

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# அமெரிக்காவுக்கு சுற்றுலா விசாவில் செல்பவர்கள் பணிபுரிய அனுமதி

**வாஷிங்டன், மார்ச். 24-**

அமெரிக்காவுக்கு சுற்றுலா விசாவில் செல்பவர்கள் வேலைகளுக்கு விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு செல்லும் வெளிநாட்டவர்களுக்கு பல்வேறு விசாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் எச்1பி விசாவில் இந்தியர்கள் உள்பட ஏராளமான வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் வேலை பார்த்து வருகிறார்கள்.




மேலும் சுற்றுலா விசா, வணிக விசாவில் ஏராளமானோர் அமெரிக்காவுக்கு சென்று வருகிறார்கள். இவர்கள் குறிப்பிட்ட காலம் வரை தான் அங்கு இருக்க முடியும். இதே போன்ற விசாவில் அமெரிக்காவுக்கு செல்பவர்கள் பணிபுரிய அனுமதி இல்லாமல் இருந்தது.

இந்நிலையில் அமெரிக்க விசாவில் புதிய நடைமுறை கொண்டு வரப்படுகிறது.

வணிக மற்றும் சுற்றுலா விசாவில் அமெரிக்காவுக்கு பயணிக்கும் தனிநபர், வேலைகளுக்கு விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக விசாவில் அமெரிக்காவில் இருந்தும் அவர்கள் பணிபுரிவதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் புதிய வேலை வாய்ப்பை தொடங்கும் முன் பி1 (வணிகம்) மற்றும் பி2 (சுற்றுலா) விசாவை வேலை வாய்ப்பு அங்கீகரிக்கப்பட்ட நிலைக்கு மாற்றுவதற்கான மனு மற்றும் கோரிக்கை அளித்து அனுமதி பெற வேண்டும்.

விசாவின் நிலையை மாற்றும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் அந்த நபர் அமெரிக்காவை விட்டு வெளியேறி பின்னர் புதிய வேலை வாய்ப்பை பெறுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுச்சேரியில் மீனவர்களுக்கான நிவாரணம் ரூ. 6,500 ஆக உயர்வு

## கவர்னர் தமிழிசை ஒப்புதல்

**புதுச்சேரி, மார்ச் 24-**

மீன்பிடித் தடைக்கால நிவாரணம் மற்றும் விடுமுறைக் கால நிதி உதவியை உயர்த்தி வழங்குவதற்கான கோப்பிற்கு துணை நிலை கவர்னர் ஒப்புதல் அளித்துள்ளார். புதுச்சேரி துணைநிலை கவர்னர் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

புதுச்சேரி மீன் வளம், மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மீனவர்களுக்கான விடுமுறை கால நிதிஉதவி மற்றும் இயற்கை பேரிடர் கால நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணம் மற்றும் விடுமுறைக் கால நிதி உதவியை உயர்த்தி வழங்குவதற்கான கோப்பிற்கு துணை நிலை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி, மீன்பிடித் தடைக்கால நிவாரணம் ரூ.5,500-ல் இருந்து ரூ.6,500 ஆகவும், விடுமுறைக்கால நிதியுதவி ரூ.2,500-ல் இருந்து ரூ.3,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தங்க, வைர நகைகளை பறிகொடுத்த

# ஐஸ்வர்யாவின் பினாமி நான் எனக்கூறி கணவரையே ஏமாற்றிய பணிப்பெண்

## விசாரணையில் மேலும் திடுக்கிடும் தகவல்கள்

**சென்னை, மார்ச். 24-**

நடிகர் ரஜினிகாந்த் மகள் ஐஸ்வர்யா வீட்டில் திருடியதாக பெண் பணியாளர் ஈஸ்வரி, ஓட்டுனர் வெங்கடேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஈஸ்வரியிடம் இருந்து 103 சவரன் நகை மற்றும் சுமார் 95 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நில பத்திரம், 30 கிராம் வைர நகைகள் 4 கிலோ வெள்ளி பொருட்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

முன்னதாக ஈஸ்வரி மற்றும் அவரது கணவர் அங்கமுத்து ஆகியோரை பிடித்து எம்ஜிஆர் நகரில் வைத்து தனித்தனியாக விசாரணை மேற்கொண்ட போது பல சுவாரஸ்ய தகவல்கள் போலீசாருக்கு தெரியவந்துள்ளது.

குறிப்பாக கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் மூலமாக மூத்த மகளுக்கு திருமணம் செய்து வைத்த ஈஸ்வரி, இரண்டாவது மகளுக்கு தொழில் தொடங்க மளிகைக் கடையையும், கணவர் அங்கமுத்துவிற்கு அதிக முதலீட்டுடன் கூடிய காய்கறி கடையும் வைத்துக் கொடுத்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஐஸ்வர்யாவிடம் மாதம் முப்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஈஸ்வரி, நடிகர் தனுஷ் வீட்டிற்கு மாதம் மளிகை காய்கறியை தனது மகள் மற்றும் கணவர் கடைகளில் இருந்து சுமார் 50 ஆயிரம் ரூபாய்க்கு சப்ளை செய்தது தெரியவந்துள்ளது.



திருடப்பட்ட நகைகள் தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா திருமணத்தின் போது ரஜினிகாந்த் சீதனமாக கொடுத்த நகைகள் என்பதால், பெரிய நிகழ்வுகளின் போது மட்டுமே அந்த நகைகளை அணிவதற்காக லாக்கரில் வைத்து இருந்தனர். இதனால் நகைகளை பார்க்காமல் இருந்துள்ளார்.

திருமணத்திற்கு பிறகு மற்றும் நண்பர்கள் அன்பளிப்பாக அளித்த நகைகள் ஆகியவற்றையும் லாக்கரில் வைத்து இருந்ததால், எவ்வளவு நகைகள் இருந்தது என முறையாக கணக்கு தெரியாமல் இருந்துள்ளது. இதனால், புகாரில் தொலைந்து போன நகைகள் குறித்த முறையான தகவலை ஐஸ்வர்யா தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது.

சோழிங்கநல்லூரில் வீடு போன்றவை வாங்கும் போது இவ்வளவு பணம் ஏது என்று கணவன் கேட்ட போது ஐஸ்வர்யா ரஜினிகாந்த் தனது பெயரில் பினாமியாக வாங்கியதாகவும் வெளி உலகத்திற்கு இது நமது வீடு எனவும். உண்மையில் இந்த வீடு ஐஸ்வர்யா ரஜினிகாந்துக்கு சொந்தமானது எனவும் கூறி கணவனின் வாயை அடைத்த ஈஸ்வரி, இது குறித்து யாரிடமும் வெளியில் சொல்லக்கூடாது எனவும் கூறியுள்ளார்.

இதனால் வீட்டில் இருந்தவர்களுக்கு சந்தேகம் இல்லாத வண்ணம் ஈஸ்வரி செயல்பட்டது போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது. ஓட்டுனர் வெங்கடேஷிடம் கொடுத்து நகைகளை விற்பனை செய்ததில் 20 லட்சம் ரூபாய் வந்ததாகவும், அதில் வெங்கடேசனின் பங்காக 9 லட்சம் ரூபாயை வாரி வழங்கிய ஈஸ்வரி, கணவன் பெயரில் 350 கிராம் தங்க நகைகளை வங்கியில் அடமானம் வைத்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது. புகாரில் இருப்பதைவிட அதிகப்படியான நகை பணம் கைப்பற்றப்பட்டதால் , எவ்வளவு நகைகள் கொள்ளையடித்துள்ளார்கள் என்பது குறித்தும். குறிப்பாக 18 வருடமாக வேலை பார்க்கும் ஈஸ்வரி மற்றும் சுமார் 10 வருடமாக ஓட்டுனராக பணிபுரியும் வெங்கடேசன் எவ்வாறு கூட்டு சேர்ந்து எத்தனை வருடம் நகைகளை திருடியுள்ளனர் என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் ஈஸ்வரி மீது ஏற்கனவே ஒரு வழக்கு இருப்பதாகவும் அது குறித்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பலத்த காற்று, வெள்ளத்தில் மிதக்கும் கலிபோர்னியா: மின்சாரமின்றி தவிக்கும் மக்கள்

**வாஷிங்டன், மார்ச். 24-**

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வீசிய பலத்த காற்று மற்றும் வெள்ளம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா மாகாணத்தில் பசரோவில் அடுத்தடுத்து உருவான புயல்கள் காரணமாக பல இடங்களில் கனமழை பெய்து வருகிறது. கனமழையால் நீர்நிலைகளில் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2 நாட்களாக கலிபோர்னியாவில் சூறைக்காற்றுடன் கனமழையும் பெய்தது. இதனால், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் கரையோரம் இருந்த வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. முக்கிய சாலைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டதால் போக்குவரத்தும் முடங்கியுள்ளது.

வீடுகள் மற்றும் கட்டிடங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. நெடுஞ்சாலைகள், ரயில் தண்டவாளங்கள் என எங்கும் வெள்ளம் சூழ்ந்து காணப்படுவதால் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது.

தொடர்ந்து, மின்கம்பங்கள், மரங்கள் உள்ளிட்டவை சாய்ந்ததால் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு பல இடங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

இதையடுத்து, தாழ்வான பகுதிகளில் இருந்தவர்களை தேசிய பேரிடர் மீட்பு படையினர் மீட்டு வருகின்றனர். இதனால் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

## சென்னை தலைமை செயலகம் எதிரில்

# காங்., எம்.எல்.ஏ.க்கள் திடீர் சாலை மறியல்

**சென்னை, மார்ச் 24-**

மத்திய அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினார்கள். காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் திடீர் மறியலால் தலைமை செயலகம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

ராகுல் காந்திக்கு குஜராத் கோர்ட்டு 2 ஆண்டு ஜெயில் தண்டனை விதித்ததை தொடர்ந்து நாடு முழுவதும் காங்கிரசார் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர். கும்பகோணத்தில் மாநில தலைவர் கே.எஸ்.அழகிரி தலைமையில் காங்கிரசார் ரெயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக சட்டசபை நிகழ்ச்சியில் பங்கேற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் திடீரென அவையில் இருந்து வெளியேறினார்கள். சட்டசபை காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை தலைமையில் வெளியேறிய அவர்கள் தலைமை செயலகம் எதிரே உள்ள சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

எம்.எல்.ஏ.க்கள் ரூபி மனோகரன், பிரின்ஸ், விஜயதாரணி உள்ளிட்டவர்கள் நெற்றியில் கருப்பு துணி அணிந்து சிறிது நேரம் மறியலில் ஈடுபட்டனர். மத்திய அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினார்கள். காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் திடீர் மறியலால் தலைமை செயலகம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# கிருஷ்ணகிரியில் நடந்த ஆணவக் கொலை: சேலம் நீதிமன்றத்தில் மேலும் இருவர் சரண்

**கிருஷ்ணகிரி, மார்ச் 24-**

கிருஷ்ணகிரி அருகே காதல் திருமணம் செய்த இளைஞரை கொலை செய்த வழக்கில் தொடர்புடைய 2 பேர் நேற்று (23-ம் தேதி) சேலம் நீதிமன்றத்தில் சரண் அடைந்தனர்.

கிருஷ்ணகிரியை அடுத்த கிட்டம்பட்டியை சேர்ந்த டைல்ஸ் ஒட்டும் தொழிலாளி ஜெகன் (25). இவர் அவதானப்பட்டியை அடுத்த புழுக்கான் கொட்டாயை சேர்ந்த சங்கர் என்பவரின் மகள் சரண்யா(21) காதலித்து வந்தார். இருவரும் உறவினர்கள். இந்த காதலுக்கு சரண்யாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனை மீறி சரண்யா கடந்த ஜனவரி 26-ம் தேதி ஜெகனை திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில், கடந்த 21-ம் தேதி அவரது மாமனார் சங்கர் (43) உட்பட சிலர் சேர்ந்து கிருஷ்ணகிரி அணை பிரிவு சாலையில் ஜெகனை வெட்டிக் கொலை செய்தனர்.

இக்கொலை தொடர்பாக சங்கர், கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் அன்றைய தினமே சரண் அடைந்தார். இதனிடையே கடந்த 21-ம் தேதி இரவு, புழுக்கான் கொட்டாய் கிராமத்திற்கு சென்ற ஜெகனின் உறவினர்கள், நண்பர்கள், சங்கரின் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை, வீட்டில் இருந்த பொருட்களை அடித்து உடைத்து சேதப்படுத்தினர். இச்சம்பவத்தை தொடர்ந்து அங்கு போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், கொலை செய்யப்பட்ட ஜெகனின் சடலம் கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (22-ம் தேதி) உடற்கூறாய்வு செய்யப்பட்டது. அப்போது, கொலையாளிகள் கைது செய்தால் மட்டுமே உடலைப் பெறுவோம் என கூறி ஜெகனின் உறவினர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, அவர்களை போலீஸார் சமாதானம் செய்தனர். பின்னர் ஜெகனின் உடலை பெற்று சென்ற உறவினர்கள் தகனம் செய்தனர்.

இக்கொலை சம்பவத்தில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய எஸ்.பி சரோஜ்குமார் தாகூர் உத்தரவின் பேரில், டிஎஸ்பி தமிழரசி, இன்ஸ்பெக்டர் முரளி தலைமையில் 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தனிப்படை போலீஸார் குற்றவாளிகளை தேடி வந்த நிலையில், நேற்று இக்கொலையில் தொடர்புடைய பில்லன குப்பத்தை சேர்ந்த கரியன் (எ) முரளி (20), நல்லூரை சேர்ந்த நாகராஜ் (21) ஆகிய இருவரும் சேலம் நீதிமன்றம் எண்:4-ல் நீதிபதி யுவராஜ் முன்னிலையில் சரண் அடைந்தனர்.

**24-03-2023**




**மேஷம்:-** புதிய வியாபார விரிவாக்க விவகாரங்களில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்கும். அதன் காரணமாக முன்னேற்றம் காண்பர். இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

**ரிஷபம்:-** நல்லபடியாக உங்கள் ஆரோக்கியத்தைப் பேண வேண்டிய நாள். வாகனங்கள் வெளியில் எடுக்கும் முன் அனைத்து பாகங்களையும் சோதித்துப் பார்த்து, எடுப்பது நல்லது.

**மிதுனம்:-** அரசு வேலைக்கு மனு செய்தவர்களுக்கு சாதகமான பதில்கள் வரும். கடினமான பணியை கூட சுலபமாக முடித்துவிடுவார்கள். தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும்.

**கடகம்:-** எல்லாக் காரியங்களும் அனுகூலமாகும். அரசிடம் எதிர்பார்க்கும் சலுகைகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கும். புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**சிம்மம்:-** மனைவியின் மனம் மகிழ, மலையை கூட அசைத்துவிடுவீர்கள். மழலைச் செல்வங்கள், மடியில் போட்டுக் கொஞ்சும் நாள் விரைவில் வரலாம். தெய்வீகக் காரிய ஈடுபாடு, தான தரும சிந்தனை ஏற்படும்.

**கன்னி:-** எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். அனைவருக்கும் நன்மை செய்யும் எண்ணத்தைக் கைக்கொள்வது நல்லது. பெண்ணால் குடும்பத்தில் கலகம் உருவாகலாம்.

**துலாம்:-** மிகவும் பிரபலமான நபருடன் நட்பு உருவாகும். பல முனைகளில் இருந்து பணவரவு அதிகரிக்கும். காதல் வலையில் விழ நேரலாம். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** புதிய வாகனம் வாங்க நினைக்கும், உங்கள் எண்ணங்கள் ஈடேறும். அதன் காரணமாக புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள்.

**தனுசு:-** அதிகாரிகளிடம் பேசும் போது, அதிர்ந்து பேசாமல், அமைதியாக பேசுவது, உயர்வுக்கு வழிவகுக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும்.

**மகரம்:-** தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். வழக்கு விவகாரங்களில் சிக்கல்களை சந்திக்க நேரும். உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள்.

**கும்பம்:-** பணியில் கூடும் சம்பள உயர்வால், சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். வேலை பார்க்கும் இடத்தில் உங்கள் மதிப்பு உயரும். அதிகரிகளின் பாராட்டும் கிடைக்கும்.

**மீனம்:-** தேவையற்ற பழிகளைச் சுமக்காமல் இருக்கக் குடும்பத்தாரிடம் பேசும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் பேசவும். கவனமாக படித்தால் தடைகளைத் தகர்த்தெரியலாம். உடல் சோர்வு அதிகரிக்கும்.

## ராகுலுக்கு தண்டனை அளிக்கப்பட்ட விவகாரம்:

# கே.எஸ்.அழகிரி தலைமையில் கும்பகோணத்தில் ரயில் மறியல்

**கும்பகோணம், மார்ச் 24-**

காங்கிரஸ் கட்சி எம்.பி. ராகுல் காந்திக்கு தண்டனை அறிவிக்கப்பட்டதைக் கண்டித்து கும்பகோணம் ரயில் நிலையத்தில் காங்கிரஸ் கட்சியினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ராகுல் காந்தி கடந்த 2019-ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில், கர்நாடக மாநிலம் கோலார் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போது பிரதமர் மோடியை விமர்சித்து கருத்து தெரிவித்தார். இது குறித்து சூரத் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு அங்கு நடைபெற்ற வந்த நிலையில், இவ் வழக்கின் விசாரணை நேற்று நீதிமன்றத்திற்கு வந்தது. வழக்கினை விசாரணை செய்த நீதிபதி, ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். எனினும், இந்த வழக்கில் ராகுல் காந்திக்கு ரூ.10,000 பிணையில் ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை செல்வதற்காக, கும்பகோணம் ரயில் நிலையத்திற்கு வந்த காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் அவருடன் வந்த தஞ்சாவூர் வடக்கு மாவட்டத் தலைவர் டி.ஆர்.லோகநாதன், மாநகரத் தலைவர் மிர்சாவூதீன், மாநிலத் துணைத் தலைவர் ஜி.ராஜேந்திரன், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் வி.தியாகராஜன் மற்றும் காங்கிரஸ் கட்சியினர், ராகுல் காந்திக்கு நீதிமன்றத்தில் தண்டனை விதித்துள்ளதை அறிந்ததும், அந்த தீர்ப்பைக் கண்டித்து முன்னறிவிப்பின்றி, திருச்சியிலிருந்து சென்னை செல்லும் சோழன் விரைவு ரயிலை மறித்து தண்டவாளத்தில் அமர்ந்து கண்டன முழக்கமிட்டனர்.

இதனையறிந்த ரயில்வே போலீஸார், அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தியதின் பேரில், ரயில் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. பின்னர், அதே ரயிலில் காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி, சென்னைக்கு சென்றார். இதனால் அங்கு சுமார் அரை மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர், காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியது: “ராகுல் காந்தியை இந்தியாவை விட்டு அப்புறப்படுத்தி, அவரை நசுக்கி அவரது வளர்ச்சியை பா.ஜ.க தடுக்க பார்க்கிறது. பாஜவினர் ஜனநாயகத்தை பாராளுமன்றத்தில் செயல்பட விடாமல் முடக்கி வருகிறார்கள். இவற்றைக் குறித்து கருத்து கூறினால் தேச விரோத செயலில் ஈடுபடுவதாக பா.ஜ.கவும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பினரும் குற்றச்சாட்டு எழுப்புகின்றனர்.

பா.ஜ.கவிற்கு எதிராக கருத்து கூறினால், அது தேச விரோதமாகுமா?, அதானிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறினால் அதையும் தேச விரோதம் என அவர்கள் கூறி வருகிறார்கள். ஜெர்மனியில் ஹிட்லர் எவ்வாறு அடக்கு முறையை கையாண்டாரோ, அதே போல் இந்தியாவில் பா.ஜ.க. தனது அடக்குமுறையை செயல்படுத்தி வருகிறது. ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் அவற்றை ராகுல் காந்தி தகர்த்து எறிவார் என்பதில் எங்களுக்கு எந்த ஐயமுமில்லை. இந்த தீர்ப்பைக் கண்டித்து தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றது” எனத் தெரிவித்தார்.

# வருமான வரி செலுத்துவோருக்காக சிறப்பு மொபைல் செயலி அறிமுகம்

**புதுடெல்லி, மார்ச் 24-**

*‘AIS for Taxpayers’* எனும் மொபைல் போன் செயலியை இந்திய வருமான வரித் துறை அறிமுகம் செய்துள்ளது. வருடாந்திர தகவல் அறிக்கை (ஏஐஎஸ்) / வரி செலுத்துவோர் தகவல் விவரம் (டிஐஎஸ்) போன்ற விவரங்களை வரி செலுத்துவோர் இதில் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல தரப்புகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த செயலியில் வரி செலுத்துவோருக்கு விரிவான தகவல் வழங்கப்படுவதாக தெரிகிறது.

வரி செலுத்துவோர் தங்கள் டிடிஎஸ்/டிசிஎஸ், வட்டி, டிவிடெண்ட், பங்கு பரிவர்த்தனைகள், வரி செலுத்துதல் மற்றும் வருமான வரியை திரும்பப் பெறுதல் (டேக்ஸ் ரிட்டர்ன்) தொடர்பான தகவல்களை எளிதாக இந்த செயலியின் மூலம் அறிந்து கொள்ளலாம் என வருமான வரித்து றை தெரிவித்துள்ளது. வரி செலுத்துவோருக்கு மேம் ப டுத் தப் பட்ட சேவையை வழங்கும் நோக்கில் எளிய முறையில் இந்த செயலி வழங்கும் என்றும் தெரிகிறது. இந்தச் செயலியை பயன்படுத்துவது எப்படி?

ஆண்ட்ராய்டு மற்றும் ஆப்பிள் போன் பயனர்கள் இந்த செயலியை பயன்படுத்தலாம். *AIS for Taxpayers* செயலியை ஆப் ஸ்டோரில் இருந்து டவுன்லோட் செய்து கொள்ளலாம். பின்னர் அதில் பயனர்கள் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்கு பான் கார்டு எண்ணை பயனர்கள் பயன்படுத்த வேண்டியுள்ளது. மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு வரும் ஓடிபி எண்ணை உள்ளிட்டு பயனர்கள் இதில் இணையலாம். தொடர்ந்து பயனர்கள் 4 டிஜிட் கொண்ட ரகசிய எண்ணை உள்ளிட வேண்டும். அதை செய்தால் இந்த செயலியை பயனர்கள் பயன்படுத்தலாம். இதனை ஏஐஎஸ் வலைதளத்திலும் பயன்படுத்த முடியும்.

செயலியின் அம்சங்கள் என்ன?

1) பொதுவான விவரங்கள் என சொல்லப்படும் பயனர் பெயர் மற்றும் பான் கார்டு விவரங்களை பயனர்கள் பெறலாம்.

2) வருடாந்திர தகவல் அறிக்கை (ஏஐஎஸ்) / வரி செலுத்துவோர் தகவல் விவரத்தை (டிஐஎஸ்) இதில் பெறலாம். அதை டவுன்லோடும் செய்யலாம்.

3) டிடிஎஸ் குறித்த கருத்துகளை வரி செலுத்துவோர் இதன் மூலம் வழங்கலாம் என தெரிகிறது. அதை PDF கோப்பாக ஒருங்கிணைக்கவும் முடியும் என தெரிகிறது.

4) இந்த செயலியில் சாட் பாட் மூலம் பயனர்கள் தங்களது சந்தேகங்களுக்கு பதில் பெறலாம்.

# உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில் 10 பேர் பலி

**கீவ், மார்ச். 24-**

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில் 10 பேர் பலியாகினர்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஒரு ஆண்டை கடந்து நீடித்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் உக்ரைனின் முக்கிய நகரங்களில் ரஷ்ய படைகள் டிரோன் தாக்குதலை நடத்தியது.

தலைநகர் கீவ்வின் தெற்கு பகுதியில் உள்ள ஒரு பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அக்கட்டிடம் இடிந்தது.

இதில் 3 பேர் பலியானார்கள். அதே போல் ரிஷிசிவ் நகரில் உள்ள கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதியில் நடந்த டிரோன் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயம் அடைந்தனர்.

சபோரிஜுயாவில் குடியிருப்பு பகுதியில் நடந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். இதற்கிடையே தாக்குதலுக்கு பயன் படுத்தப்பட்ட 21 டிரோன்களில் 16-யை சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷ்யா சென்றிருந்த சீன அதிபர் ஜின்பிங் அங்கிருந்து புறப்பட்ட சில மணி நேரங்களில் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சென்னை, கோவை மற்றும் ஓசூரில் தொழில்நுட்ப நகரங்கள் தொடங்கப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்

**சென்னை, மார்ச் 24-**

சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளிலே டெக் சிட்டி என்று அழைக்கப்படும் தமிழ்நாடு தொழில்நுட்ப நகரங்களைத் தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை வர்த்தக மையத்தில் நேற்று தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் எண்மய சேவைகள் துறை சார்பில் நடைபெற்ற தொழில்நுட்பம், தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு உச்சி மாநாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது, தொழில் நுட்பத்தில் உலக நாடுகள் எத்தகைய முன்னேற்றத்தை அடைகிறதோ அதே தொழில்நுட்ப வளர்ச்சியைநாங்கள் அதே காலத்தில் தமிழ்நாட்டிலும் உருவாக வேண்டும் என்பது தான் என்னுடைய கனவு.

1996-ம் ஆண்டே கம்யூட்டர் துறையை தமிழ்நாட்டின் களமாக ஆக்கினார் அன்றைய முதல்வர் கருணாநிதி. இதைத் தொடர்ந்து கோவையிலும் தகவல் தொழில் நுட்பப் பூங்கா தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் தொழில் நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டன. அவற்றின் தொடர்ச்சியாக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளிலே டெக் சிட்டி என்று அழைக்கப்படும் தமிழ்நாடு தொழில்நுட்ப நகரங்களைத் தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளது. இந்த தொழில்நுட்ப நகரங்கள், தகவல் தொழில் நிதி நிறுவனங்களையும் புத்தாக்க தொழில் தொடங்கும் முனைவோர்களையும் ஒன்றிணைக்கக் கூடிய மையங்களாக விளங்கப் போகின்றன.


தொழில்நுட்பம்தான் இந்த உலகை வெல்வதற்கான சரியான கருவி. புதியவற்றை கண்டுபிடிக்கவும், அதனை பயன்படுத்தவும் தொழில் நுட்பம் தான் நமக்கு உதவ முடியும். அதனால் தான் தொழில் நுட்பத் துறையின் கட்டமைப்பை மேன்படுத்த நினைக்கிறோம்.

அனைத்து தொழில்துறைகளின் பங்களிப்போடு 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்றஇலக்கை எட்ட வேண்டும் என்று நாம் தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம். மென்பொருள் சேவையைப் பொறுத்தவரையில், அத்துறையிலே உலகளாவிய வகையில் நாம் முதன்மை இடத்திலிருக்கிறோம்.

இந்தியாவில் அத்துறையில் பெரும்வெற்றியைப் பெற்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையிலே ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழில் மையமாக உருவெடுக்கும்.

தமிழ்நாட்டிலே உலகளாவிய திறன் மையங்கள் பெரும் அளவிலே தொடங்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். நம்முடைய எண்ணமும் இதுதான். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும். இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

# டெல்லி சென்றார் கவர்னர் ஆர்.என்.ரவி



**சென்னை, மார்ச் 24-**

கவர்னர் ஆர்.என். ரவி நேற்று டெல்லி புறப்பட்டு சென்றுள்ளார்.

ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய தமிழக அரசு ஏற்கனவே சட்டசபையில் மசோதா கொண்டு வந்து நிறைவேற்றி கவர்னரிடம் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்திருந்தது. ஆனால் அதற்கு கவர்னர் ரவி ஒப்புதல் அளிக்காமல் முதலில் சில விளக்கங்களை கேட்டிருந்தார்.

இந்த விளக்கங்களுக்கு சட்டத்துறை சார்பில் விரிவான பதில் அனுப்பப்பட்டிருந்தது. ஆனாலும் அதில் திருப்தி அடையாத கவர்னர் ஆர்.என்.ரவி அந்த சட்ட மசோதாவை இம்மாதம் முதல் வாரத்தில் தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பினார். இதைத்தொடர்ந்து ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை மீண்டும் நேற்று சட்டசபையில் நிறைவேற்றி கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பும் தமிழக அரசு முடிவு செய்தது.

இந்த சூழலில் கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று காலையில் திடீரென டெல்லி புறப்பட்டு சென்றுள்ளார். இன்று டெல்லியில் தங்கி இருக்கும் கவர்னர், மத்திய அரசின் சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், கவர்னர் தனிப்பட்ட காரணங்களுக்காக டெல்லி சென்றுள்ளார். அவரது நிகழ்ச்சிகள் எதுவும் வெளியிடப்படவில்லை. இன்று இரவு அவர் சென்னை திரும்புவார் என்று தெரிவித்தனர்.

## நாட்டில் அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு:

# 5 அடுக்குத் திட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும்

## மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

**புதுடெல்லி, மார்ச் 24-**

நாட்டில் கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கி உள்ள நிலையில், அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களும் 5 அடுக்குத் திட்டங்களை பின்பற்ற மத்திய சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது., 'நாட்டில் கொரோனா பாதிப்புகள் அதிகரித்துவரும் நிலையில் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களும் சோதனை செய்தல், கண்காணித்தல், சிகிச்சையளித்தல், கோவிட் நடைமுறையை பின்பற்றுதல், தடுப்பூசி செலுத்துதல் ஆகிய 5 அடுக்குத் திட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். கொரோனா தடுப்பு முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளை தெரிந்து கொள்வதற்காக விரைவில் நாங்கள் பயிற்சி சோதனையை மேற்கொள்வோம்.

இந்தச் சோதனை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் நடைபெறும்.

மேலும், அனைத்து மாநிலங்களும் இன்ஃப்ளுயன்சா மற்றும் கொரோனா பாதிப்பு சிகிச்சைகளுக்கான மருந்துகள், உபகரணங்களின் கிடைப்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும். இவை தவிர அனைத்து மாநிலங்களில் போதிய அளவிற்கு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள், சுகாதாரப் பணியாளர்கள் இருப்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும்; என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கோவிட்-19 மற்றும் இன்ஃப்ளூயன்சா நோய் குறித்த சூழல்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலை குறித்து பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடந்தது. இந்த நிலையில், மத்திய சுகாதாரத்துறை நேற்று (வியாழக்கிழமை) இந்த அறிவுத்தலை வழங்கியுள்ளது. ஆய்வுக் கூட்டத்தில், கோவிட் -19 தொற்றுநோய் இன்னும் முழுவதுமாக விலகவில்லை. எனவே, நாடு முழுவதும் நிலவும் சூழ்நிலையை தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய அவசியம் உள்ளது என்று பிரதமர் அறிவுறுத்தினார்.

இந்நிலையில், கடந்த 140 நாட்களில் இல்லாத அளவிற்கு இந்தியாவில் புதன் கிழமை ஒரே நாளில் 1,300 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இதன்மூலம், தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 7,605 ஆக உயர்ந்துள்ளது. தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 46 லட்சத்து 99 ஆயிரத்து 418 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றால் கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் தலா ஒருவர் தொற்று பாதிப்பால் இறந்துள்ளனர். இதன்படி, கொரோனா தொற்றால் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 30 ஆயிரத்து 816 ஆக உள்ளது என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# கூட்டணி தலைவர்கள் விமர்சனம் குறித்து அண்ணாமலை கருத்து

**சென்னை, மார்ச் 24-**

கூட்டணி கட்சி தலைவர்கள் விமர்சனம் குறித்து தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கருத்து தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்த தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறியதாவது,

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு எப்படி இருக்கிறது என்றால் நடிகர் வடிவேல் நடித்த 23-ம் புலிகேசி படம் தான் நினைவுக்கு வருகிறது. முதல்வர் தினமும் சமூக வலைதளத்தில் யார் தவறாக பேசுகின்றனர் என கேட்டு அதிகாலையில் கைது செய்வதில் தான் அரசு முனைப்பு காட்டுகிறது.

பெண்கள், குழந்தைகள் மீது வன்மத்தை காட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அரவக்குறிச்சி தொகுதியில் செலவு செய்தது குறித்து அரசு உளவுத்துறை, 70 ஆயிரம் போலீசார் கர்நாடகவிற்கு அனுப்பட்டும். வருவாய் துறை அதிகாரிகள், ஆட்சியர், உளவுத் துறை உள்பட முழு அரசு அதிகாரிகளை அண்ணாமலை மீது ஏவி விட்டு சொத்து எவ்வளவு, எவ்வளவு சம்பாதித்தான், கர்நாடகவில் 9 ஆண்டுகள் பணியில் இருந்த போது ஒரு பைசா லஞ்சம் வாங்கினானா என்பதை தேடி பிடித்து வந்து சொல்ல சொன்னால் அதற்கு பதிலளிக்க தயாராக இருக்கிறேன். கூட்டணி கட்சி தலைவர்கள் விமர்சனம் செய்வதை நல்லதாக பார்க்கிறேன். அரசியலை பொறுத்த வரை யாரும் நண்பர்கள் அல்ல. இதை எப்போ புரிந்து கொள்கிறோமோ அப்போதுதான் பா.ஜ.க. வளர்ச்சி அடையும். அரசியலில் நிரந்தரமான நண்பர்களும் கிடையாது. நிரந்தரமான எதிரிகளும் கிடையாது. தனித்து போட்டியிடுவது என்பது எங்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையே உள்ள பிரச்சினை. இவ்வாறு அவர் கூறினார்.

# கிருஷ்ணகிரி சம்பவம்: சட்டசபையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் விளக்கம்

**சென்னை, மார்ச் 24-**

கிருஷ்ணகிரியில் நடந்த சம்பவம் குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று சட்டசபையில் விளக்கம் அளித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கவன ஈர்ப்புக்கு, முதல்வர் மு.க. ஸ்டாலின் பதில் அளித்து பேசியதாவது,

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் காவல் நிலைய சரகம், கிட்டம்பட்டியைச் சேர்ந்த ஜெகன் (28) என்பவர், மார்ச் 21 அன்று சுமார் 1.30 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தில் கே.ஆர்.பி. அணை சாலையில் சென்று கொண்டிருந்த போது, முழுக்கான்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த சங்கர்(அ.தி.மு.க. பிரமுகர்) உள்ளிட்ட மூவர், ஜெகனை வழிமறித்து ஆயுதங்களால் தாக்கியதில் ஜெகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக, காவேரிப்பட்டினம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்த விசாரணையில், கல்லூரி ஒன்றில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவியான சங்கரின் மகள் சரண்யாவை, டைல்ஸ் பதிக்கும் தொழிலாளியான ஜெகன் காதலித்து, பெண் வீட்டாரின் எதிர்ப்பை மீறி வீட்டை விட்டு அழைத்துச் சென்று, 26-1-2023 அன்று கோவிலில் வைத்துத் திருமணம் செய்து கொண்டதாக தெரிகிறது.

இதனால் ஆத்திரமுற்ற சங்கர் உள்ளிட்டோர் இச்சம்பவத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். சங்கர் காவல் துறையினரால் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கொலையில் சம்பத்தப்பட்டவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர், அவதானப்பட்டி அதிமுக செயலாளர் என்பது காவல் துறையினரால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

நடைபெற்று வரும் தி.மு.க. ஆட்சியில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாதவண்ணம் உரிய நடவடிக்கைகளும், விழிப்புணர்வுப் பணிகளும் காவல் துறை சார்பில் மாவட்ட நிருவாகத்தின் சார்பிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறாத வண்ணம் அரசியலுக்கு அப்பாற்பட்டு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து மனித நேய அடிப்படையில், சமூக நல்லிணக்கத்தைப் பேணிக் காத்திட வேண்டும். இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

# நடிகை யாஷிகா ஆனந்தை கைது செய்ய பிடிவாரண்ட்

## செங்கல்பட்டு கோர்ட் உத்தரவு

**செங்கல்பட்டு, மார்ச் 24-**

நடிகை யாஷிகா ஆனந்தை கைது செய்ய செங்கல்பட்டு நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது.

தமிழ் சினிமாவில் இளம் நடிகையாக இருக்கும் யாஷிகா ஆனந்த், தனது நண்பர்களுடன் காரில் பயணம் செய்த போது மாமல்லபுரம் அருகே உள்ள சூளேரிக்காடு பகுதியில் கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் யாஷிகாவின் தோழி வள்ளிச்செட்டி பவணி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் படுகாயம் அடைந்த யாஷிகா மற்றும் அவரது இரண்டு ஆண் நண்பர்கள் ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தனர். இதையடுத்து யாஷிகாவிடம் போலீசார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். இந்த வாக்குமூலத்தில் காரை ஓட்டி வந்தது யாஷிகா தான் என்பது உறுதி செய்யப்பட்டது. யாஷிகா அதிவேகமாக காரை ஓட்டி வந்த போது திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்துக்குள்ளானதாகவும் அந்த காரில் இருந்த யாஷிகாவின் தோழி பவானி சீட்பெல்ட் அணியாததால் காருக்கு வெளியே தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே மரணமடைந்ததாகவும் அவருடைய வாக்குமூலத்தில் தெரியவந்தது. தொடர்ந்து படுகாயம் அடைந்த யாஷிகா மற்றும் அவரது இரண்டு ஆண் நண்பர்கள் ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக நடிகை யாஷிகா ஆனந்த் செங்கல்பட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய நிலையில் இவர் ஆஜராகாததால் வரும் 25-ஆம் தேதிக்குள் ஆஜராக வேண்டும் என கைது வாரண்ட் பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சென்னை ஐகோர்ட்டிற்கு கூடுதல் நீதிபதி நியமனம்

**சென்னை, மார்ச் 24-**

சென்னை உயர் நீதிமன்றத்திற்கு ஒரு கூடுதல் நீதிபதியை நியமித்தும், ஆந்திரா மற்றும் தெலங்கானாவிலிருந்து இரண்டு நீதிபதிகளை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்தும் ஜனாதிபதி திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிக்கையில், மாவட்ட நீதிபதியாக உள்ள பி.வடமலையை சென்னை உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமித்து ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆந்திரா உயர் நீதிமன்ற நீதிபதி பட்டு தேவ்ஆனந்த், மற்றும் தெலங்கானா உயர் நீதிமன்ற நீதிபதி தேவராஜு நாகார்ஜுன் ஆகியோரை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக இடமாற்றம் செய்தும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 61ஆக உயரவுள்ளது. அதேநேரம் நீதிபதிகளுக்கான காலியிடங்களின் எண்ணிக்கை 14 ஆக குறையும். நீதிபதிகள் மூன்று பேரும் விரைவில் பதவி ஏற்பார்கள் என எதிர்பார்க்கபடுகிறது.

# சென்னை அரசு அச்சகத்தில் அதிநவீன அச்சு இயந்திரம்

## அமைச்சர்கள் சாமிநாதன், சேகர்பாபு இயக்கி வைத்தனர்

**சென்னை, மார்ச் 24-**

சென்னை தங்கசாலை பேருந்து நிலையம் அருகே ஏழுகிணறு பகுதியில் அரசு அச்சகம் செயல்படுகிறது. இங்கு அரசு தொடர்பான முக்கிய ஆவணங்கள், தேர்தல் படிவங்கள் அச்சடிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் விநியோகிக்கப்படுகிறது.

இந்த அச்சகத்தில் நேற்று காலை செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். பின்னர், அரசு அச்சகத்துக்கு ரூ. 1.15 கோடி செலவில் புதிதாக வாங்கப்பட்டுள்ள நவீன அச்சுப்பொறி இயந்திரம், ரூ. 60 லட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ள நான்கு வண்ணம் அச்சு இயந்திரம் ஆகியவற்றை ரிப்பன் வெட்டியும் குத்துவிளக்கேற்றியும் இயக்கி வைத்தனர். இதையடுத்து அச்சக ஊழியர்களிடம் வேலை குறித்து கேட்டறிந்தனர். இந்த ஆய்வின் போது, செய்தித்துறை அரசு செயலர் செல்வராஜ் மற்றும் பாலதிரிபுர சுந்தரி மற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## கோயில் அறங்காவலர்களை தேர்வு செய்ய

# மாவட்டக்குழுக்கள் மே மாத இறுதிக்குள் நியமிக்கப்படும்

## ஐகோர்ட்டில் இந்து சமய அறநிலையத்துறை தகவல்

**சென்னை, மார்ச் 24-**

கோயில் அறங்காவலர்களைத் தேர்வு செய்வதற்கான மாவட்ட குழுக்கள் மே மாத இறுதிக்குள் நியமிக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்து சமய அறநிலையத் துறை தகவல் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் அறங்காவலர்கள் நியமனம் தொடர்பான வழக்கு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் மகாதேவன் மற்றும் ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அறநிலையத் துறை தரப்பில், "மொத்தமுள்ள 38 மாவட்டங்களில் 23 மாவட்டங்களில் உள்ள கோயில்களுக்கு அறங்காவலர்களை தேர்வு செய்வதற்கான மாவட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன. திருநெல்வேலி, நாகப்பட்டினம், நாமக்கல் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு மார்ச் 31ம் தேதிக்குள் மாவட்ட குழுக்கள் அமைக்கப்படும். மீதமுள்ள 11 மாவட்டங்களில் மே மாத இறுதிக்குள் மாவட்ட குழுக்கள் நியமிக்கப்படும்" என்று உறுதியளிக்கப்பட்டது.

இதனைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், மே மாதத்துக்குள் அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்ட குழுக்கள் நியமிக்கப்படாவிட்டால் அறநிலையத் துறை செயலாளரும், ஆணையரும் நேரில் ஆஜராக உத்தரவிட நேரும் என எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும், மாவட்ட குழுக்கள் எத்தனை நாட்களில் அறங்காவலர்களை நியமிப்பர் என்ற விவரங்களையும், அறங்காவலர்கள் நியமனம் தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளை அறிக்கையாக தாக்கல் செய்யவும் உத்தரவிட்டனர். அறிக்கைத் தாக்கல் செய்ய தவறினால், அறங்காவலர் நியமன பணிகளை கண்காணிக்க உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி நியமிக்கப்படுவார் எனக்கூறி, விசாரணையை ஏப்ரல் 5ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

அப்போது மனுதாரர்கள் தரப்பில், "மாவட்ட குழுக்களில் அரசியல் கட்சியினர் நியமிக்கப்பட்டுள்ளனர். அரியலூர் மாவட்டக் குழுவில் இந்து அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்" என்று புகார் தெரிவிக்கப்பட்டது. அப்போது அரசியல் கட்சியைச் சேர்ந்த கடவுள் பக்தி உள்ளவரை நியமிக்கலாம் எனத் தெரிவித்த நீதிபதிகள், இந்து அல்லாதவர் நியமிக்கப்பட்டிருந்தால், அதை எதிர்த்து தனியாகதான் வழக்கு தொடர முடியும். இந்த வழக்கில் அதை விசாரிக்க முடியாது என்று தெரிவித்தனர்.

# பட்டாசு ஆலை விபத்துகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, மார்ச் 24-**

பட்டாசு ஆலைகளில் அடிக்கடி நிகழும் விபத்துகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காஞ்சிபுரம் மாவட்டம் குருவிமலை பகுதியில் உள்ள பட்டாசு கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்ததாகவும், 18 பேர் படுகாயமடைந்து கவலைக்கிடமாக உள்ளதாகவும் தகவல் வந்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்கள் விரைவில் பூரண குணமடைந்து இல்லம் திரும்ப வேண்டுமென்ற என்னுடைய அவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் உரிய பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படாததுதான் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது. பட்டாசுத் தொழிற்சாலைகளில் காலமுறை ஆய்வு மேற்கொள்ளப்படாததற்குக் காரணம் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறை என்று கூறப்படுகிறது.

இதன் காரணமாக விலைமதிக்க முடியாத உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. உயிரிழப்புகளை தடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது. பட்டாசுத் தொழிற்சாலைகளில் அடிக்கடி ஏற்படும் விபத்தினை தடுக்கும் வகையில், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் அதிகாரிகளோடு ஒரு விரிவான ஆய்வுக் கூட்டத்தை நடத்திட வேண்டும். மேலும் இனி வருங்காலங்களில் காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யவும், பாதுகாப்புப் பணிகளை வலுப்படுத்தவும், காலிப் பணியிடங்கள் இருப்பின் அவற்றை நிரப்பவும், பட்டாசுத் தொழிற்சாலைகளில் தகுதி வாய்ந்த வேதியியலர் பணியமர்த்தப்படுவதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கோவை நீதிமன்ற வளாகத்தில்

# மனைவி மீது ஆசிட் வீசிய கணவர் கைது

**கோவை, மார்ச். 24-**

கோவையில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மனைவி மீது கணவர் ஆசிட் வீசிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதை தொடர்ந்து கணவரை கைது செய்த காவல் துறையினர் அவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கோயம்புத்தூர் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில், முதல் குற்றவியல் நீதிமன்ற வளாகத்தில் பெண் ஒருவர் நின்று கொண்டு இருந்தார். அப்போது, அங்கு இருந்த மர்ம நபர், அந்தப் பெண்ணின் மீது ஆசிட் வீசி தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனை கண்டு அதிர்ச்சியடைந்த வழக்கறிஞர்கள் பெண்ணை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், மர்ம நபரை அடித்துப் பிடித்து காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறை அதிகாரிகள், ஆசிட் தாக்குதல் நடத்திய நபரை விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

முதல் கட்ட விசாரணையில் குடும்பப் பிரச்சினை காரணமாக, மனைவி கவிதா மீது கணவர் சிவக்குமார் ஆசிட் வீசியது தெரியவந்துள்ளது.

# தஜிகிஸ்தானில் நிலநடுக்கம்

**தஜிகிஸ்தான், மார்ச் 24-**

தஜிகிஸ்தான் நாட்டில் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது.

தஜிகிஸ்தான் நாட்டின் நோவோபோட நகரில் இருந்து 51 கிமீ தொலைவில் பதிவான இந்த நிலநடுக்கமானது பூமிக்கு அடியில் 5.6 கி.மீ ஆழத்திலும், ரிக்டர் அளவில் 5.9 ஆகவும் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல் ஏதும் வெளியாகவில்லை.


இதில் அதிகபட்சமாக பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத்தில் 7.7 என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியது. இந்நிலையில் தஜிகிஸ்தான் நாட்டின் நோவோபோட நகரில் இருந்து 51 கிமீ தொலைவில் பூமிக்கு அடியில் 5.6 கி.மீ ஆழத்தில், ரிக்டர் அளவில் 5.9 ஆக பதிவாகியுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல் ஏதும் வெளியாகவில்லை. இதையடுத்து தஜிகிஸ்தானில் மீண்டும் மிதமான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக தேசிய புவி அதிர்வு முகமை தகவல் தெரிவித்துள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவிற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி ஆளுநர் உடனே ஒப்புதல் அளிக்க வேண்டும். தேசிய அளவில் இத்தகைய சட்டம் கொண்டுவர மத்திய அரசை அனைத்து அரசியல் கட்சிகளும் வற்புறுத்த வேண்டும்.

- கே.பாலகிருஷ்ணன்



பாரதிய ஜனதா கட்சி அல்லாத தலைவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய சதி நடந்து கொண்டிருக்கிறது. ராகுல் காந்தியுடன் எனக்கு கருத்துவேறுபாடுகள் உண்டு. ஆனால் ஒரு அவதூறு வழக்கில் அவரைச் சிக்க வைப்பது முறையில்லை. நான் கோர்ட்டை மதிக்கிறேன். ஆனால் தீர்ப்பை ஏற்கவில்லை.

- கெஜ்ரிவால்



தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை த.மா.கா சார்பில் வரவேற்கிறேன். மசோதாவானது கவர்னரின் ஒப்புதலுக்கு உட்பட்டு, ஆன்லைன் சூதாட்டத்துக்கு முழுமையான தடை ஏற்படும் என்ற நம்பிக்கை தற்போது ஏற்பட்டுள்ளது.

- ஜி.கே.வாசன்



வரும் 2024 பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக வலிமையாக போராட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றாக இணைய வேண்டியது அவசியம். ஆனாஸ் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஓரணியில் இணைவார்களா என்று எனக்கு சந்தேகமாக உள்ளது.

- மெகபூபா முஃப்தி

# 8 வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை: ராமநாதபுரம் கோர்ட்டில் 2 பேருக்கு 20 ஆண்டு சிறை




**ராமநாதபுரம்,மார்ச்.24-**

ராமநாதபுரம் அருகே 8 வயது சிறுவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்த இருவருக்கு 20 ஆண்டு சிறை தண்டனை விதித்து கோர்ட்டில் தீர்ப்பு கூறப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் பெரிய பள்ளி வாசல் தெருவை சேர்ந்தவர்கள் ஜோசப் மகன் செல்வராஜ்(வயது24) மற்றும் முருகன் மகன் நம்புகாளீஸ்வரன் (24). கூலித்தொழிலாளியான இவர்கள் இருவரும் கடந்த 2021-ம் ஆண்டு ஜுலை 31-ந் தேதி அவர்களின் தெரு பகுதியில் நின்று கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த 8 வயது சிறுவன் ஒருவரை அழைத்து பேசியுள்ளனர். மேலும், அந்த சிறுவனிடம் ஆசை வார்த்தை கூறி அருகில் உள்ள அப்துல்கலாம் குளம் காட்டுகருவேல மர பகுதிக்கு நைசாக அழைத்து சென்றனர். அங்கு வைத்து சிறுவனுக்கு இருவரும் பாலியால் தொல்லை கொடுத்தார்களாம். அங்கிருந்து அழுதபடி வீட்டிற்கு வந்த சிறுவனை கண்ட பெற்றோர் நடந்த விபரத்தை கேட்டறிந்து அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து சிறுவனின் தந்தை அளித்த புகாரின் அடிப்படையில் ராமேசுவரம் நகர் காவல்நிலைய போலீசார் வழக்குபதிவு செய்து இருவரையும் கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை ராமநாதபுரம் மகிளா கோர்ட்டில் நடைபெற்று வந்தது. வழக்கினை விசாரித்த நீதிபதி கோபிநாத் மேற்கண்ட 2பேருக்கும் தலா 20 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும், அதனை கட்டத்தவறினால் மேலும் 1 ஆண்டு சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பு கூறினார். பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு ரூ.5 லட்சம் நிவாரணமாக வழங்க அரசுக்கு நீதிபதி பரிந்துரை செய்தார். இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் கீதா ஆஜரானார்.





**மதுரை மாவட்டம், அலங்காநல்லூரில் நடைபெற்ற பாஸ்கரன், அம்சவல்லி ஆகியோரின் மகன் யோகேஷ், மணமகள் சர்மிளா ஆகியோர் திருமணத்தை மதுரை ஆதீனம் நடத்தி வைத்து சால்வை அணிவித்து வாழ்த்தினார்.**



**அவதூறு வழக்கில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து மதுரை கோரிப்பாளையம் தேவர் சிலை பகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் கார்த்திகேயன் தலைமையில் காங்கிரசார் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதில் மாவட்ட துணைத்தலைவர் டாக்டர்.ஆர்.ரவிச்சந்திரன், கவுன்சிலர்கள் தல்லாகுளம் முருகன், ஜெய்ஹிந்துபுரம் முருகன் மற்றும் ஐ.சிலுவை, செய்யது பாபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**

# முதுகுளத்தூர் காமராஜர் பள்ளியில் விஞ்ஞானத்துளிர் வாசகர் திருவிழா





**முதுகுளத்தூர், மார்ச். 24**

முதுகுளத்தூர் காமராஜர் மெட்ரிக் பள்ளியில் விஞ்ஞானத்துளிர் வாசகர் திருவிழா நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் உள்ள காமராஜர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி யில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து விஞ்ஞானத்துளிர் வாசகர் திருவிழா(2023)நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட தலைவரும் பள்ளியின் தாளாளருமான அய்யாச்சாமி தலைமை தாங்கினார். பள்ளியின் துணை முதல்வர் அனிதா முன்னிலை வகித்தனர். ஓய்வு பெற்ற ஆசிரியர் துரைபாண்டியன் வாழ்த்துரை வழங்கினார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் -மாவட்ட செயலாளர் காந்தி- மாவட்ட துணைதலைவர் நவநீதகிருஷ்ணன்- மாவட்ட செயற்குழு உறுப்பினர் சாகுல்மீரா-விஜயராம்-பள்ளி மேலாளர் ரவீந்திரன் மற்றும் பள்ளியின் ஆசிரியர்கள்-மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கிராம சபை கூட்டம்



**தேனி மார்ச் 24**

நீர் இன்றி அமையாது உலகு என்ற கருத்திற்கிணங்க தண்ணீரே அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக உள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இந்தாண்டு உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு தண்ணீர் மற்றும் சுகாதார நெருக்கடியை தீர்க்க மாற்றத்தினை துரிதப்படுத்துதல் என்ற சிறப்பு பொருளை அறிவித்துள்ளது. உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டம் விபரம் வருமாறு

குள்ளப்புரம் ஊராட்சியில் தலைவர் மஞ்சுளாதேவி செந்தில்குமார் தலைமையில் துணைத்தலைவர் பாஸ்கர் முன்னிலையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. பொறியாளர் சுபா மேற்பார்வையிட்டார். செயலர் முத்துச்செல்வம் தீர்மானங்களை வாசித்தார். 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முதலக்கம்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு தலைவர் பிர பா ம ரு து பாண் டி யன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் முருகேஷ் முன்னிலை வகித்தார். ஊராட்சி ஒன்றிய உதவியாளர் ;ஜெயமணி மேற்பார்வையிட்டார். செயலர் கோபால் தீர்மானங்களை வாசித்தார். 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஜெயமங்கலம் தலைவர் அங்கம்மாள்சப்பாணி தலைமையில் துணைத்தலைவர் தேவி முன்னிலையில் ஊராட்சி ஒன்றிய அலுவலர் பாஸ்கரன் மேற்பார்வையில் செயலர் கோபாலகிருஷ்ணன் தீர்மானங்களை வாசித்தார். 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

எருமலைநாயக்கன்பட்டியில் தலைவர் பால்ராஜ் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. துணைத்தலைவர் சுசிலா முன்னிலையில் ஊராட்சி ஒன்றிய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அமுதா மேற்பார்வையில் செயலர் பாண்டியராஜன் தீர்மானங்களை வாசித்தார். 280-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நீர்நிலைகள் மற்றும் குடியிருப்பு உள்ளிட்ட சுற்றுப்புறபகுதிகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். மழை நீர் வடிகால் மற்றும் உறிஞ்சு குழிகளை நாம் முறையாக பராமரித்து, தண்ணீரை வீணாக்காமல் நமக்கும், நமது எதிர் கால சந்ததினருக்கும் கொண்டு சேர்த்திடும் வகையில் தண்ணீரை சேமித்திட வேண்டும். தண்ணீரை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பது, தண்ணீர் சேமிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



**அண்மையில் அ.தி.மு.க.வில் இணைந்த தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் நிர்மல்குமார் மரியாதை நிமித்தமாக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாரை சந்தித்து வாழ்த்து பெற்றார்**

# குறைதீர்க்கும் கூட்டம் நடப்பது தெரியவில்லை: விவசாயிகள் புகார்

**அருப்புக்கோட்டை மார்ச் 24.**

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கும் தகவலை அனைத்து விவசாயிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என அருப்புக்கோட்டை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயிகள் புகார் கூறினர்.

அருப்புக்கோட்டை ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. ஆர்.டி.ஓ. கல்யாணகுமார் தலைமை வகித்தார். அருப்புக்கோட்டை, காரியாபட்டி ,திருச்சுழி உட்பட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் காவிரி, வைகை ,குண்டாறு, வைப்பாரு, பாசன விவசாய சங்க கூட்டமைப்பு விருதுநகர் மாவட்ட தலைவர் ராம் பாண்டியன், அருப்புக்கோட்டை தாலுகாவிற்கு உட்பட்ட பரலச்சி பகுதியில் ஏராளமான விவசாயிகள் பயிர் காப்பீடு இன்சூரன்ஸ் செய்துள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்தவித விளைச்சலும் இல்லை, இதுவரை எந்த வித பயிர்களுக்கும் காப்பீட்டு தொகை வந்து சேரவில்லை, இது குறித்து பலமுறை கோரிக்கை வைத்துள்ளோம். இப்பகுதி விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு தொகையை உடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் சீமை கருவேலை மரங்களை அகற்ற எங்கள் அமைப்பு சார்பாக அனைத்து விதமான உதவிகளும் செய்ய தயாராக இருப்பதாக கூட்டத்தில் கூறினார். விவசாயிகள் பல்வேறு புகார் மனுக்களை அழித்தனர். இனிவரும் காலத்தில் அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் கூட்டம் நடக்கும் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும் என விவசாயிகள் வருவாய் கோட்டாட்சியரிடம் வலியுறுத்தினார்.

## நகை ஏல அறிவிப்பு

நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையம் தாலுகா 9-A, புதுபள்ளி பாளையம் ரோடு, வேலாங்காட்டார் காம்ப்ளக்ஸில் இருக்கும் சண்முகா கார்ப்பரேஷன் (லைசன்ஸ் எண் 1/2015-16) நகை அடகு கடையில் 1.09.2020 முதல் 31.10.2021 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம் வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என்.முருகப்பன் அவர்களால் 28.04.2023 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணி முதல் ப. கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் வைத்து பொது ஏலம் விடப்படும்.

இப்படிக்கு
ஏலதாரர் என்.முருகப்பன்
திண்டுக்கல்

---

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஊத்தங்கரை.
I.A.No.03/2023 –in-
I.A.No.04/2023 -in-
O.S.No.44/2022

மல்லிகா,
த/பெ.சிவராமன் ,
கேத்துநாய்க்கன்பட்டி கிராமம்,
கேத்துநாய்க்கன்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
.......வாதி

//எதிராக//

1. பச்சமுத்து
2. வேலாயுதம்
3. ராஜேஸ்வரி

------ பிரதிவாதிகள்

இருவரும் வசிக்கும் இடம் :
1. பச்சமுத்து த/பெ.வேலாயுதம்
2. ராஜேஸ்வரி க/பெ.பச்சமுத்து
கேத்துநாய்க்கன்பட்டி கிராமம்
மற்றும் அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரிமாவட்டம்.

நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி வழக்கை வாதி மேற்படி பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறார். மேற்படி வழக்கில் கனம் நீதிமன்றம் மூலம் அனுப்பிய சம்மனை வாங்காமல் காலம் தாழ்த்தி வருகின்றீர்கள். மேற்படி வழக்கு வருகின்ற 18.04.2023-ம் தேதியில் தாங்கள் ஆஜருக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ முன்னிலையாகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்சொன்ன வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை கண்டிப்பாக அறியவும்.

//நீதிமன்ற உத்தரவுப்படி//
K.வடிவேல். B.A., B.L.,
Ms.No.246/2001
வழக்கறிஞர் & உறுதிமொழி ஆணையர் ஊத்தங்கரை.

---

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஊத்தங்கரை.
I.A.No.02/20223 –In-
I.A.No.03/2023 -In
I.A.No.04/2023-In-
O.S.No.178/2010

தீபா த/பெ .ரேனு
சுண்ணாலம்பட்டி கிராமம்,
ஊத்தங்கரை அஞ்சல்
மற்றும் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
-------வாதி

// எதிராக//

1. ரேணு வகையறா
------பிரதிவாதிகள்

சரவணன் த/பெ.ராஜா,
சுண்ணாலம்பட்டி கிராமம்,
ஊத்தங்கரை அஞ்சல் மற்றும்
வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
------R4/D4 பிரதிவாதி

பாத்திமா க/பெ.முபாரக் அலி
காமராஜ் நகர், ஊத்தங்கரை டவுன்
மற்றும் அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
--------R6/D 6பிரதிவாதி

வடிவழகி க/பெ.குப்புசாமி
முதலியார்
காமராஜ் நகர், சேலம் மெயின்
ரோடு, ஊத்தங்கரை டவுன் மற்றும்
அஞ்சல், ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
-------R8/D8 பிரதிவாதி

செல்வராஜ்
த/பெ ஈஸ்வரன் செட்டியார்
MSM தோட்டம் லட்சுமி ஏஜென்சி
ஊத்தங்கரை டவுன்
மற்றும் அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
-------R10/D10 பிரதிவாதி

சாந்தி த/பெ.சின்னகண்ணு
அருந்ததியர் காலனி
ஊத்தங்கரை டவுன்
மற்றும் அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
-------R13/D13 பிரதிவாதி

R16 / D16 to R19 / D19 வரை வசிக்கும் இடம் :
கல்யாணி க/பெ.சேட்டு,
ராஜி த/பெ.ஜடையன்
பரமசிவம் த/பெ. செல்வன்
லட்சுமணன் த/பெ.சென்னன்
கேத்துநாய்க்கன்பட்டி கிராமம்,
ஆட்டோ ஸ்டாண்ட் அருகில்,
சிங்காரப்பேட்டை அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
....... R16/D16 TO R19/D19 பிரதிவாதிகள்

PP1 to PP2 வசிக்கும் இடம் :
சாலனி க/பெ.சேட்டு
மலரி க/பெ.நடராஜ்
காந்தி நகர், சுண்ணாலம்பட்டி
கிராமம், ஊத்தங்கரை அஞ்சல்
மற்றும் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
------ PP1 முதல் PP2 உத்தேச பிரதிவாதிகள்

நீதிமன்ற அறிவிப்பு

மேற்படி வழக்கினை வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் வழக்கின் 4-ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் இறந்த காசியின் வாரிசுகளை தாவாவில் தரப்பினராக சேர்க்கவும், தாவா தரப்பினர்களை சேர்க்காததால் ஏற்பட்ட அபேட்மெண்ட் ரத்து செய்யவும், மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரியும் இடைமனு எண் : 2/22, 3/33, 4/22 என எண்ணிடப்பட்டு, மேற்படி இடைமனுக்களில் 4, 6, 8, 10, 13, 16, முதல் 19 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மற்றும் 1, 2 உத்தேச எதிர்மனு தாரர்கள்/உத்தேசபிரதிவாதிகளின் ஆஜருக்காக வேண்டி வருகின்ற 28.03.2023-ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ முன்னிலையாகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்சொன்ன மனுக்களில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை கண்டிப்பாக அறிவும்.

//நீதிமன்ற உத்தரவுப்படி//
K.வடிவேல். B.A., B.L.,
Ms.No.246/2001
வழக்கறிஞர் & உறுதிமொழி ஆணையர்
ஊத்தங்கரை.

---

## நகை ஏல அறிவிப்பு

நாமக்கல் மாவட்டம் ப. கொமாரபாளையம் தாலுகா, 9-A, புதுபள்ளிபாளையம் ரோடு வேலங்காட்டார் காம்ப்ளக்ஸில் இருக்கும் அழகர் பைனான்ஸ் (லைசன்ஸ் எண் 4/2006-07) நகை அடகு கடையில் 1.09.2020 முதல் 31.10.2021 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம் வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என். முருகப்பன் அவர்களால் 28.04.2023 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் ப.கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் வைத்து பொது ஏலம் விடப்படும்.

இப்படிக்கு
ஏலதாரர் என்.முருகப்பன்
திண்டுக்கல்

## நகை ஏல அறிவிப்பு

நாமக்கல் மாவட்டம் ப. கொமாரபாளையம் தாலுகா, எண் 9ஏ, புதுப்பள்ளிபாளையம் ரோடு, வேலாங்காட்டார் காம்ப்ளக்ஸில் இருக்கும் சண்முகா பைனான்ஸ், (லைசன்ஸ் எண் 05-2004-05) நகை அடகு கடையில் 1.09.2020 முதல் 31.10.2021 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம், வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என். முருகப்பன் அவர்களால் 28.04.2023ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் ப.கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் மேற்படி இடத்திலேயே வைத்து பொது ஏலம் விடப்படும்.

இப்படிக்கு
ஏலதாரர் N. முருகப்பன்
திண்டுக்கல்

## நகை ஏல அறிவிப்பு

நாமக்கல் மாவட்டம் ப. கொமாரபாளையம் தாலுகா 9-A, புதுபள்ளி பாளையம் ரோடு, வேலாங்காட்டார் காம்ப்ளக்ஸில், இருக்கும் சண்முகா பைனான்ஸ் (லைசன்ஸ் எண்.3/2007-08), நகை அடகு கடையில் 1.09.2020 முதல் 31.10.2021 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம் வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என்.முருகப்பன் அவர்களால் 28.04.2023 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணி முதல் ப.கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் வைத்து பொது ஏலம் விடப்படும்.

இப்படிக்கு
ஏலதாரர் என்.முருகப்பன்
திண்டுக்கல்

---

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி.
மோ.அ.தி.மு.எண்:1536/2023
நாள்:07.03.2023

அலமேலு க/பெ. லேட்.ராமசாமி,
ஆனந்தூர் கிராமம் & அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
மனுதாரர்.

//எதிராக//

வருவாய் வட்டாட்சியர்,
ஊத்தங்கரை,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
எதிர்மனுதாரர்.

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது மாமியார் விசாலாட்சி க/பெ. லேட்.லட்சுமணன் என்பவர் கடந்த 19.12.2015-ம் தேதியில் இறந்துவிட்டார். அவருடைய இறப்பை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய தவறியதால் மேற்படி இறப்பை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்திரவு வழங்கவேண்டி மேற்படி மனுவை கனம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனுதாரர் மனு தாக்கல் செய்திருக்கிறார். மேற்படி மனுவில் எவருக்னேும் ஆட்சேபணை இருப்பின் ஒரு வார காலத்திற்குள் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாக அறியவும்.

இப்படிக்கு.
அலமேலு க/பெ. லேட்.ராமசாமி,
ஆனந்தூர் கிராமம் & அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,

---

## பொது அறிவிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், வெப்பாலம்பட்டி கிராமம் புல எண்.7/1, 2 ஹெக்டர் பரப்பளவில் சாதாரண கல் குவாரிப்பணி தொடங்க திரு.P.கோவிந்தசாமி என்பவருக்கு சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையம் SEIAA-TN/F:No:8565/EC.No: 5550/2023, படி இன்று தடையில்லா சான்றிதழ் 21.02.2023 அன்று அளித்துள்ளது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
திரு.P.கோவிந்தசாமி

---

**தமிழ்நாடுஅரசு**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**
**மின் ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம்**
**ந.க.எண் .2915/2021/அ4 நாள் .05.01.2023 மற்றும்**
**ந.க.எண்.350/2021/.அ4 .நாள் 31.01.2023**
**ஒப்பந்த படிவம் இனம் வாரியான விலை**
**(இரட்டை உறை முறை)**

தமிழக ஆளுநருக்காகவும்,அவரது சார்பாகவும், கிருஷ்ணகிரி மாவட்டம் , சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில், சாதாரண கற்கள் பொது உபயோக சிறுவகை கனிமங்களுக்காக **2021 – 2022** மற்றும் **2023- 2023** ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட டெண்டர் /.ஏலத் தொகையிலிருந்து பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

1. முழுமையான விவரங்களுக்குwww.tntenders.gov.in.என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம் .
2. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in .என்ற இணையதள முகவரியில் இலவசமாக 27.03.2023 முதல் 12.04.2023 வரையிலான காலத்தில் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம்
3. மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 1% தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்படவேண்டும் .
4. வேலைகள் தொடர்பானகூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் தேவைப்படின் சூளகிரி ஊராட்சி ஒன்றியஅலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை நேரில் தெரிந்து கொள்ளலாம்.
5. **ஒப்பந்தப்புள்ளி தொடர்பான முக்கியமான நாட்கள்**

| | | |
|---|---|---|
| **1.** | முன் ஒப்பந்தப்புள்ளி கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | **05.04.2023 காலை 11.00 மணி** |
| **2.** | மின் ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் | **12.04.2023 மாலை 03.00 மணி** |
| **3.** | மின் ஒப்பந்த நமூனா சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | **12.04.2023 மாலை 03.00 மணி** |
| **4.** | மின் ஒப்பந்த நமூனா திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | **12.04.2023 மாலை 04.00 மணி** |

**வட்டார வளர்ச்சி அலுவலர்**
**சூளகிரி**

**செ.ம.தொ.துறை.வெ.ஆ.எண் 47/ஒப்பந்தப்புள்ளி /விளம்பரம் /2023 நாள் 23.03.203**

# தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் கி.சாந்தி நேரில் ஆய்வு



**தர்மபுரி, மார்ச்.24-**

தருமபுரி மாவட்டம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் கி.சாந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரூர் வட்டம் மற்றும் நகரம் அம்பேத்கார் நகர் பகுதியில் ஆதிதிராவிடர் இன மக்களுக்காக வழங்கப்பட்ட கிராம புலஎண்: 104 -பரப்பு: 4.20.0 ஏர்ஸ் மற்றும் புலஎண்: 120- பரப்பு 3.19.0 ஆகிய பரப்பில் 350 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் குறித்தும், தற்போழுது இணையவழி பட்டாக்களாக வழங்குவது குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கலெக்டர் கி. சாந்தி ஆய்வு மேற்கொண்டார்கள்.


இதனை தொடர்ந்து கலெக்டர் பாப்பிரெட்டிப் பட்டி வட்டம், எருமியாம்பட்டி கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்காக இலவச வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து நேரடி ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் கல்லூரி விடுதி பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பட்டுக்கோணம்பட்டி கிராமத்தில் அமையவுள்ள உள்ள இடத்தினை கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்கள். பட்டுக்கோணம்பட்டி ஊராட்சி, சாமியாபுரம் பிற்படுத்தப்பட்டோர் நல நடுநிலைப்பள்ளியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். அப்பள்ளியில் ஆண்கள் - 41 பெண்கள் - 31 மொத்தம் - 72 மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. மேலும் உணவு தரமானதாகவும், சுவையானதாகவும் சமைத்து வழங்க கலெக்டர் அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் பள்ளிக் கட்டிட வளாகம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது மின் இணைப்பு கலன்களை பள்ளி மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பயன்படுத்துமாறு பள்ளி தலைமையாசிரியருக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், அதன் பின்னர் அரூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது, அரூர் வட்டாட்சியர் பெருமாள், அரூர் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கோபிநாத், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் சுப்பிரமணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மலைகிராமமான தக்கட்டி ஊராட்சியில் இந்தியன் வங்கியின் 45 வது கிளை: கலெக்டர் தீபக் ஜேக்கப் திறந்து வைத்தார்



**கிருஷ்ணகிரி, மார்ச்.24-**

மலைகிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளான சாலை வசதி குடிநீர் வசதி மின்சார வசதி போக்குவரத்து வசதி சுகாதார வசதி உயர்கல்வி வசதிகள் குறிப்பாக இணைதள சேவை தடையின்றி கிடைக்க பி.எஸ்.என்.எல். மூலம் புதிய டவர்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நகர பகுதிக்கு இணையாக தங்கு தடையின்றி கிடைக்க மாவட்ட நிர்வாகம் தொடர் நடவடிக்கை எடுக்கும் என கலெக்டர் தீபக் ஜேக்கப் தகவல்.

கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி வட்டம் மலை கிராமமான தக்கட்டி ஊராட்சியில் இந்தியன் வங்கியின் சார்பாக 45 -வது கிளையை கலெக்டர் தீபக் ஜேக்கப் திறந்து வைத்து புதிய வங்கி கணக்கு துவக்கியவர்களுக்கு வங்கி கணக்கு புத்தகத்தை வழங்கினார். இந்தியன் வங்கி மண்டல பொது மேலாளர் பத்மாவதிஸ்ரீகாந்த் அனைவரையும் வரவேற்றார். கலெக்டர் பேசும்பொழுது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி சார்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தின்; 45 - வது கிளையாக மலை கோடி மலை கிராமமான தக்கட்டி ஊராட்சியில் இன்று புதிய கிளை துவக்கப்பட்டுள்ளது. வங்கி சேவை இல்லாத கிராமத்திற்கு வங்கி சேவையினை அளித்திடும் வகையிலும் மலை கிராம மக்களுக்கு சேவை செய்திடும் நோக்கத்தோடு இந்த கிளை துவக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை வங்கி சேவைகளை பெறுவதற்காக மக்கள் சுமார் 15 கி.மீ. தொலைவிலுள்ள அஞ்செட்டிக்கு சென்று வந்த நிலையில் இந்த கிளை துவக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கிளையின் மூலம் தக்கட்டி உரிகம் கோட்டையூர் மஞ்சுக்கொண்டப்பள்ளி மாடக்கல் மற்றும் சுற்று வட்டார பகுதியிலுள்ள பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.

தற்போது பொதுமக்கள் இருக்கும் இடத்திலேயே நெட் பேங்க் மூலம் மற்றவர்களுக்கு பணம் அனுப்பும் வசதி ஆன்லைனில் பொருட்கள் வாங்குவது மின்கட்டணம் பேருந்து முன்பதிவு போன்ற பல்வேறு சேவைகளை பெற்று வருகிறார்கள். மேலும் வங்கி கணக்கு துவக்குவதன் மூலம் புதிய கடன் வசதிகள் பெறுவது அரசு மானியங்கள் பெறுவது தங்களுடைய நகை மற்றும் பணம் பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்பது வங்கியில் டெபாசிட் செய்வதற்கும் விவசாய கடன் பெறுவதற்கும் மகளிர் சுய உதவிக்குழுவினர் மாணவர்கள் ஓய்வூதியதாரார்கள் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கும் பல்வேறு அரசு மானியங்கள் பெறுவதற்கும் புதிய தொழில் துவங்குவதற்கு வங்கி கடன் பெறுவதற்கும் வங்கி கணக்கு முக்கிய பயன்பாடாக உள்ளது. எனவே இந்த வங்கி சேவையை இப்பகுதி மக்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் இக்கிராமம் கர்நாடக மாநில எல்லையையொட்டி அமைந்துள்ளதால் தக்கட்டி உரிகம் கோட்டையூர் மஞ்சுக்கொண்டப்பள்ளி போன்ற ஊராட்சிகளில் குடிநீர் மின்சாரம் சாலைவசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் தமிழக அரசின் திட்டங்கள் அனைத்தும் தங்களுக்கு கிடைக்க மாவட்ட நிர்வாகம் உறுதுணையாக இருக்கும் என கலெக்டர் தீபக் ஜேக்கப் தெரிவித்தார். தொடர்ந்து அஞ்செட்டி ஊராட்சியில் பேருந்து நிறுத்தம் அருகில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் நிழற்கூடம் கட்டமான பணிகளை பார்வையிட்டு ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றவும் புதிய பேருந்து நிலையம் கட்ட இடம் தேர்வு செய்ய அலுவலர்களிடம் கேட்டுக் கொண்டார். அதனை தொடர்ந்து கோலட்டியில் உள்ள அரசு பெருமளவு பட்டு பண்ணையை கலெக்டர் நேரில் பார்வையிட்டு மல்பரி செடிநடவுகள் முட்டை உற்பத்தி பட்டுபுழு வளர்ப்பு போன்ற பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிறைவாக தேன் கனிக்கோட்டை பேரூராட்சியில் உள்ள தேவராஜன் ஏரியை பார்வையிட்டு ஏரிக்கு அருகில் புதிய பூங்கா அமைக்கவும் நடை பாதை அமைக்கவும் இடம் தேர்வு செய்து அரசுக்கு கருத்துரு தயார் செய்ய பேரூராட்சி அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில்; இந்தியன் வங்கி மண்டல துணை பொது மேலாளர் பழனிகுமார் முன்னோடி வங்கி மேலாளர் மகேந்திரன் மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் பிரசன்ன பாலமுருகன் கிளை மேலாளர் சி.பி.ருகேஷ் உதவி கிளை மேலாளர் அபிலாஷ் காசாளர் ராம்குமார் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாகரத்தினம் சென்னகிருஷ்ணன் வட்டாட்சியர்கள் அனிதா சரவணமூர்த்தி உதவி இயக்குநர் (பட்டுவளர்ச்சி) நிஷா துணை வட்டார வளர்ச்சி அலுவலர் குமரேசன் ராஜா கண்ணு வருவாய் ஆய்வாளர் பாலகிருஷ்ணன் தக்கட்டி ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜன் உரிகம் ஊராட்சி மன்ற தலைவர் ரத்தினம்மாதேவ் அஞ்செட்டி ஊராட்சி மன்ற தலைவர் பாஸ்கர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தருமபுரி டொன் போஸ்கோ கல்லூரியில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு



**தருமபுரி, மார்ச்.24-**

தருமபுரி டொன் போஸ்கோ கல்லூரியில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வு, அரசு போக்குவரத்துக் கழக தருமபுரி மண்டல விழிப்புணர்வு பேருந்தின் வாயிலாக 23.03.2023 அன்று மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வினைக் கல்லூரித் துணை முதல்வர் அருட்தந்தை பாரதி பெர்னாட்ஷா முன்னிலை வகித்துத் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் தருமபுரி மண்டலம் சார்பாக, ஓட்டுநர் பயிற்றுநர் திரு எஸ். மணி கலந்து கொண்டு, மாணவ, மாணவியரைச் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வாகனத்தை பார்வையிடச் செய்தல் மூலமாக விபத்துக்கள் ஏற்படும் விதம், தலைக்கவசம் அணியாமல் இரு சக்கர வாகனங்களை இயக்குவது, மது அருந்திய பின் வாகனங்களை இயக்குவது போன்ற பல்வேறு சாலை விதி மீறல்கள் பற்றியும், சாலை பாதுகாப்பு விதிகளை கடைபிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கம் அளித்தார். மாணவ, மாணவியர் பலரும் விழிப்புணர்வு வாகனப் பேருந்தைப் பார்வையிட்டும், திரையிடப்பட்ட காட்சிகள் வாயிலாகவும் சாலை பாதுகாப்பு விதிகள் குறித்த விழிப்புணர்வை பெற்றுப் பயனடைந்தனர்.

# ராகுல் காந்திக்கு சிறை தண்டனை: தர்மபுரியில் காங்கிரஸ் கட்சியினர் சாலை மறியல் போராட்டம்



**தர்மபுரி, மார்ச்.24-**

ராகுல் காந்திக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து தர்மபுரியில் காங்கிரஸ் கட்சியினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதமர் மோடி குறித்து அவதூறாக பேசிய வழக்கில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும் இந்த வழக்கில் அவருக்கு ஜாமீனும் வழங்கப்பட்டது. இந்த நிலையில் ராகுல் காந்திக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் ஆங்காங்கே மறியல் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தர்மபுரி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் தர்மபுரி 4 ரோட்டில் ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்திற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் எம்.பி.யுமான தீர்த்தராமன் தலைமை தாங்கினார். முன்னாள் மாவட்ட தலைவர் பாலகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் நரேந்திரன், ஜெய்சங்கர், மகிலா காங்கிரஸ் மாவட்ட தலைவர் காளியம்மாள், மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் முபாரக், ஐ.என்.டி. யூ. சி. மாவட்ட தலைவர் சிவலிங்கம், விவசாயப் பிரிவு தலைவர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தப் போராட்டத்தின் போது பிரதமர் மோடியை கண்டித்தும், மத்திய அரசின் பழிவாங்கும் போக்கை கண்டித்தும் காங்கிரஸ் கட்சியினர் கண்டன கோஷங்களை எழுப்பினர். இந்த சாலை மறியல் போராட்டத்தால் 4 ரோடு பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு மற்றும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனை எடுத்து போலீசார் போராட்டத்தில் பங்கேற்றவர்களை அங்கிருந்த அப்புறப்படுத்தினர்.

தொடர்ந்து காங்கிரஸ் கட்சியினர் அண்ணா சிலை முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் மாநில எஸ்.சி.-எஸ்.டி. பிரிவு தலைவர் ராமசுந்தரம், நகரத் தலைவர் வேடியப்பன், பொதுக்குழு

உறுப்பினர்கள் சண்முகம், மோகன் குமார், வட்டாரத் தலைவர்கள் மணி, ஞானசேகர், பெரியசாமி, வேலன், சண்முகம், சந்திரசேகர் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதேபோன்று மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் காங்கிரஸ் கட்சியினர் ராகுல் காந்திக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி திட்டத்திற்காக சமூக பங்களிப்பு நிதியுதவி அளித்திட முன்வர வேண்டும்

## சேலம் கலெக்டர் செ.கார்மேகம் வேண்டுகோள்

**சேலம்,மார்ச்.24-**

"நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி" (NS-NOP) திட்டத்திற்காக சமூக பங்களிப்பு நிதி வழங்கிடலாம். இதுகுறித்து கலெக்டர் செ.கார்மேகம், தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு அரசால் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் அரசு பள்ளிகளின் மேம்பாட்டிற்கு சமூக பங்களிப்பு நிதி (CSR) மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகளை பெற, "நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி" (NS-NOP) என்ற பெயரில் தமிழக அரசால் ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக திட்டப்பணிகளுக்கு நிதி அளிப்பது, பொருள்களாக வழங்குவது, தன்னார்வ சேவை புரிவது வாயிலாக அரசு பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளை சமூக பங்களிப்புடன் நிறைவேற்றிட இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சமூக பங்களிப்பு நிதியினை பெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.12.2022 அன்று "நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி" (NS-NOP) என்ற https://nammaschool.tnschools.gov.in/#/ தனி இணையதளம் மற்றும் தனி வங்கிக் கணக்கு உருவாக்கப்பட்டுள்ளது. அரசு பள்ளிகளின் மேம்பாட்டிற்காக குறு, சிறு, பெரு நிறுவனங்கள், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் பங்களிப்பு அளித்திட உறுதுணையாக உள்ளது. இணையதளம் வழியாக பெறப்படும் நிதியானது பள்ளிகளுக்கு தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற இன்றியமையாத தேவைகளுக்கான செலவினம் மேற்கொள்ளப்பட்டு நன்கொடையாளருக்கு பயனீட்டு சான்றிதழ் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு பள்ளிகளுக்கென தனிநபர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் குறு, சிறு, பெரு நிறுவனங்களின் சமூகபங்களிப்பு நிதி போன்றவை "நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி" (NS-NOP) இணையதளம் வாயிலாக மட்டுமே அளிக்கப்பட வேண்டும். இதற்கென ஒவ்வொரு பள்ளிக்கும் "நம்ம ஸ்கூல் - நம்ம ஊரு பள்ளி" (NS-NOP) என்ற பெயரில் வங்கி கணக்கு துவங்கவும் பள்ளிக் கல்வித்துறையால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நன்கொடையாளர்கள் தாங்கள் விரும்பும் பள்ளியை மேற்குறிப்பிட்ட இணையதளம் வாயிலாக தேர்ந்தெடுத்து நன்கொடை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே சேலம் மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளை மேம்படுத்த தாராளமாக நிதியுதவி அளித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் செ. கார்மேகம், தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீகிருஷ்ணா பாரா மெடிக்கல் கல்லூரியில் 3ம் மாதிரி செய்முறை தேர்வுகள் துவக்கம்



**தர்மபுரி மார்ச்: 24**

தர்மபுரி மாவட்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீ கிருஷ்ணா பாரா மெடிக்கல் கல்லூரியில் டிப்ளமோ இன் ப்ராக்டிகல் நர்சிங், டிப்ளமோ இன் மெடிக்கல் ஆப்ரேஷன் தியேட்டர் டெக்னாலஜி, டிப்ளமோ இன் மெடிக்கல் லேபரட்டரி டெக்னாலஜி டிப்ளமோ இன் டயாலிசிஸ் டெக்னாலஜி, இதுபோன்ற அனைத்து துறை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு செய்முறை தேர்வுகள் மற்றும் செய்முறை பயிற்சிகள் 21,22.03.2023 ஆகிய இரண்டு நாட்களும் நடைபெற்றது. இந்த செய்முறை தேர்வில் மாணவர்கள் படித்து முடித்த பிறகு மருத்துவமனை பணிக்கு செல்லும் பொழுது நோயாளிகளை எப்படி கையாள வேண்டும் என்பதை முன்னதாகவே கல்லூரியில் செய்முறை தேர்வின் போது ரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, ரத்தத்தில் உள்ள அனைத்து வகையான பரிசோதனைகளும் செய்து காட்டினார்கள், கட்டு போடுதல், மன நோயாளிகளை எப்படி குளிக்க வைப்பது, மனித உடலில் 206 எலும்புகளை கணக்கிடுதல், கை கழுவும் முறை, கொரோனா பரிசோதனை செய்தல் செய்யும் பொழுது உடைகளை எவ்வாறு அணிவது, நோய் எதிர்ப்பு சக்திக்கான எந்த மாதிரி மருந்துகளை உட்கொள்ள வேண்டும், நோயாளிகளின் படுக்கரை எப்படி சரி செய்வது, எந்த நோய்க்கு எந்த மாதிரியான மாத்திரைகள் கொடுப்பது, இது போன்ற செய்முறைகள் மாணவ மாணவிகள் பேராசிரியர்களிடம் அந்தந்த துறை மாணவர்கள் செய்து காட்டினார்கள் இதற்கு உறுதுணையாக இருந்து வழிநடத்திய கல்லூரியின் பேராசிரியர்கள் மகேஸ்வரி, ரஞ்சிதா, குமுதா, கல்லூரி முனைவர் பொன்னம்பலம், கல்லூரி நிர்வாக அலுவலர் ஜோதி பாசு ஆகியோர் ஒன்றிணைந்து இந்த செய்முறை தேர்வுகள் நடத்தி வருகின்றனர். இந்த கல்லூரியுடைய நோக்கம் வருடத்திற்கு மூன்று மாதிரி தேர்வுகள் நடத்தப்படுகிறது. ஏனென்றால் வருகின்ற ஏப்ரல் மாதத்தில் 2023&2024 ஆண்டிற்கான பல்கலைக்கழக தேர்வு நெருங்கி வருவதனால் முன்கூட்டியே மூன்று மாதிரி தேர்வுகளிலும் மாணவர்களுக்கு அவர்களுடைய கல்வி திறமையை வெளிப்படுத்துவதற்கு இந்த தேர்வுகள் மாணவருடைய நலனை கருத்தில் கொண்டு தேர்வு நடத்தப்படுகிறது மூன்று மாதிரி தேர்வுகள் எழுதும் பொழுது பல்கலைக்கழக தேர்வுக்கு அந்த மாணவர்களுக்கு எளிதாக எழுத இந்த மாதிரி தேர்வுகள் உதவுகின்றது இதற்கு கல்லூரியின் தாளாளர் கிருஷ்ணமூர்த்தி இறுதியாக பல்கலைக்கழக தேர்வு எழுதும் அனைத்து துறை கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் நன்றி கூறினார்.



**தருமபுரிமாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், செல்லியம்பட்டி ஊராட்சியில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம் நடைபெற்றது. உடன் ராஜா- ஊராட்சி மன்றத்தலைவர், குமுதா-வேல்முருகன் ,துணைத்தலைவர் சகாயராணி மகிமைநாதன் உள்பட பலர் உள்ளனர்.**

# சைபர் கிரைம் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வுக்கூட்டம்




**ராசிபுரம்,மார்ச்.24-**

ராசிபுரம் காவல்துறை சார்பில் சைபர் கிரைம் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் ராசிபுரம் ஹோட்டரி ஹாலில் நடைபெற்றது. பணி நிறைவு பெற்ற அரசு அலுவலர்கள் சமூக ஆர்வலர்கள் ரோட்டரி உறுப்பினர்களுக்கான சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு கூட்டத்தில் ராசிபுரம் ரோட்டரி சங்கத் தலைவர் கே.எஸ்.கருணாகர பன்னீர் செல்வம் தலைமை வகித்தார். சங்க செயலாளர் ஜி.ராமலிங்கம் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் ராசிபுரம் காவல் துறை துணை கண்காணிப்பாளர் டி.டி.கே.செந்தில்குமார் முத்துவும் முப்பது திருடர்களும் என்ற சென்னை பெருநகர காவல் துறையினரால் வெளியிடப்பட்ட சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டு சைபர் குற்றங்கள் எவ்வாறு ஏற்படுகிறது.

அதனை உடனடியாக 1930 கட்டணமில்லா தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்வது குறித்தும் விளக்கம் அளித்துப் பேசினார். செல்போனில் குறிப்பாக பெண்களின் படத்தை பதிவு செய்வது தவிர்க்கவும் பழக்கமில்லாத நபர்களிடமிருந்து ஓடிபி எண் கேட்கப்படும்போது அதனை கொடுக்காமல் தவிர்க்கவும் வயதானவர்கள் வங்கியில் சென்று பணம் எடுக்கும் போது துணையுடன் சென்று எடுக்கவும் பணம் பரிவர்த்தனையை ஜிபே போன்றவைகளால் செய்யவும் தங்கள் வீடுகளில் சிசி டிவி கேமராவை அமைப்பது சம்பந்தமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்திப் பேசினார். மேலும் ராசிபுரம் காவல் துறை ஆய்வாளர் கே.சுகவனம் காவல் உதவி ஆய்வாளர் தங்கம் ஆகியோர் விழிப்புணர்வு ஏற்படுத்திப் பேசினர். முடிவில் ரோட்டரி சங்கப் பொருளாளர் என்.தனபால் நன்றி கூறினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# அரக்கோணம் நகரில் ஆட்சி மொழி: சட்டவார விளக்க கூட்டம்



**அரக்கோணம் மார்ச் 24**

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் நகரில் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ஆட்சி மொழி சட்ட வாரம் 2022-23 ஆட்சி மொழி விளக்க கூட்டம் மற்றும் பாராட்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவிற்கு டவுன் ஹால் தலைவர் டாக்டர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கி பேசினார். மளிகை வியாபாரிகள் சங்க செயலாளர் கோ.அசோகன், மருந்து வணிகர் சங்கம் இரா.வெங்கட்டரமணன் முன்னிலை வகித்தனர். இராணிப்பேட்டை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் முனைவர் ப. நாகராசன் திட்ட விளக்க உரையாற்றினார். கிருஷ்ண கல்வி குழும செயலாளர் தா.சு.ரவிக்குமார், தநா.வணிகர் சங்கங்களின் பேரவை மாநில இணை செயலாளர் கோ.எத்திராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகவும். கலைமாமணி பனபாக்கம் கே.சுகுமார், எழுத்தாளர் தா.தனசிங், ரயில் பயணிகள் சங்க தலைவர் நைனா மாசிலமணி ஆகியோர் வாழ்த்தியும் பேசினார்கள், தமிழ் படைப்பாளர்கள் சங்க செயலாளர் கோ.சுந்தர்ராஜ். திருவள்ளுவர் மக்கள் நல பேரவை கவிஞர் ஞா.சாமிதுரை மற்றும் ஞானமூர்த்தி, அனைத்து வணிகர் சங்கம் எம்எஸ். மான்மல், டி.கமலகண்ணன், கே ஆர்.சுப்பிரமணிய ராஜா, எம்எஸ்.மான்மல், ஜிடி.கமலகண்ணன், மொழி வேந்தர் தமிழ் சங்கம் கவிஞர் க.அல்போன்ஸ், சா.அப்சல்கான் ஆகியோர் விழா மேடையில் பாராட்டப்பட்டனர். பேராசிரியர் வீரமணி, லையன்.நரசிம்மன், மூத்த ஆசிரியர்கள் காந்தராஜ், சு.பாண்டியன் மற்றும் எம்எஸ்.ரவீந்தர் உட்பட தமிழ் ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள் என பலர் திரளாக கலந்து கொண்டனர். செம்மொழி வேந்தர் தமிழ் சங்க பொதுச் செயலாளர் கவிஞர் மு.இஸ்மாயில் இன் முகில் நிகழ்ச்சி களை தொகுத்து வழங்கினார்.

## ஈரோடு: வங்கியாளர்கள் ஆய்வுக்குழு கூட்டத்தில் 2023-24ம் ஆண்டிற்கான வருடாந்திர கடன் திட்ட அறிக்கை: கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி வெளியிட்டார்



**ஈரோடு.மார்ச்.24-**
ஈரோடு கலெக்டர் ஹெச். கிருஷ்ணனுண்ணி தலைமையில் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆய்வுக்குழு கூட்டத்தில் 2023-24-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கடன் திட்ட அறிக்கையினை வெளியிட்டு, தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மகளிர் திட்டம், மாவட்ட தொழில் மையம், தாட்கோ, வேளாண்மைத் துறை, மீன்வளத் துறை, கைத்தறித் துறை உள்ளிட்ட அரசுத்துறைகளின் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்கள், விவசாயிகள், இளைஞர்கள், தொழில் முனைவோருக்கு மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள் உள்ளன. 2023-24 ஆம் நிதி ஆண்டிற்கான கடன் இலக்கு ரூ.16 ஆயிரத்து 30 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கான கடன் இலக்கு : ரூ.8814.95 கோடிகள், சிறு மற்றும் குறு தொழில்களுக்கான கடன் இலக்கு
: ரூ.5465.26 கோடிகள், பிற முன்னுரிமைகளுக்கான கடன் இலக்கு : ரூ.1596.48 கோடிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கடன்களை, தொடர்புடைய வங்கிகள் காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும். அப்போதுதான் அரசுத்துறைகள் மீதும், வங்கிகள் மீதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

விண்ணப்பித்து நிலுவையிலுள்ள கடன் விண்ணப்பங்களை பரிசீலித்து நடவடிக்கை மேற்கொண்டு கடன்களை வழங்கிடவும், குறிப்பாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற பயிர்கடன் மற்றும் சிறுகுறு தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்கள் வழங்குவதில் எவ்வித புகார்களுக்கும் இடம் அளிக்காமலும், முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்கிட வங்கிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். தொடர்ந்து சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்களை மேம்படுத்தும் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உறுவாக்கும் திட்டம், பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் மற்றும் பாரத பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைபடுத்தும் திட்டம் ஆகிய சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இத் திட்டங்களின் மூலம் சிறப்பான சேவைகள் வழங்கிய சிறந்த வங்கிகள் மற்றும் சிறந்த வங்கிக்கிளைகளுக்கும் 2022-2023 ஆண்டிற்கான விருதுகளையும் கலெக்டர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி வழங்கினார். மேற்காணும் நான்கு திட்டங்கள் மூலமான 326 நபர்களுக்கு ரூ.58.60 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது இக்கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்தகுமார் வரவேற்புரை வழங்கினார். மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்தகுமார், மாவட்டத் தொழில்மையத்தின் மேலாளர் மருதப்பன், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் டி. அசோக்குமார், தாட்கோ மாவட்ட மேலாளர், ரிசர்வ் வங்கி மேலாளர் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் மற்றும் வங்கி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

## அரசால் தடைசெய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலுமாக தவிர்க்கும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்

### நீலகிரி கலெக்டர் சா.ப.அம்ரித் அதிகாரிகளுக்கு உத்தரவு



**ஊட்டி, மார்ச்.24-**
அரசால் தடைசெய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலுமாக தவிர்க்கும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என நீலகிரி மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நீலகிரி மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழக அரசு ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை 01.01.2019 முதல் தடை செய்ய உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நீலகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் கரண்டிகள், முலாம் பூசப்பட்ட காகித தட்டுகள்,பிளாஸ்டிக் வாழை இலை வடிவத்தாள்கள், பிளாஸ்டிக் தோரணங்கள் மற்றும் பிளாஸ்டிக் கொடிகள் போன்ற, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் 19 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது.

நமது மாவட்டம் சுற்றுலா தலமாக உள்ள காரணத்தினால் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகபடியாக உள்ளது. எனவே சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், வெளிமாநில மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் அனைத்து வாகனங்களையும் பர்லியார், குஞ்சப்பணை, நாடுகாணி, கக்கநல்லா, உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சோதனை சாவடியில் பிளாஸ்டிக் பயன்பாடு தடை குறித்த விளம்பர பலகையினை வைத்து தொடர்ந்து அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.மேலும், வருவாய்த்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம், ஊரக வளர்ச்சி முகமை, பேருராட்சிகளில் தங்கள் கட்டுப்பாட்டுப்பாட்டிற்குள் உள்ள உணவகங்கள், கடைகள், பேக்கரி, வணிக வளாகங்கள் உள்ளிட்ட இடங்களில் அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோர் மீது அபராதம் விதிக்க வேண்டும்.

தொடர்ந்து பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளுக்கு சீல் வைக்க வேண்டும். சாலை ஓரங்களில் குப்பைகள் இல்லாதவாறு சம்மந்தப்பட்ட உள்ளாட்சித்துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து, சாலையோரங்களில் குப்பை கொட்டுபவர்கள் மீது அபராதம் விதிப்பதோடு, சாலையோரங்களில் குப்பைகள் இல்லாதவாறு கண்காணிக்க வேண்டும். கியாஷ்க் சரியான முறையில் செயல்படுகின்றதா என்பது குறித்து அலுவலர்கள் கண்காணிப்பதோடு, அருகில் உள்ள கடைகளில் குப்பைகளை கியாஷ்கில் கொடுக்குமாறு அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்சோதனை சாவடி பகுதிகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் குறித்து சுற்றுலா பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒலிப்பான் கருவி மூலம் தெரியப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், தொண்டு நிறுவனத்தினர், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர்களை ஈடுபடுத்தி தூய்மைப் பணிகளை இயக்கமாக கொண்டு மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளிடையே பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தும் பொருட்கள் குறித்தும், மீண்டும் மஞ்சப்பை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை பாதுகாக்க, அரசால் தடை செய் யப் பட் டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலுமாக தவிர்க்கும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர்கள் முகம்மது குதுரதுல்லா (கூடலூர்), பூஷணகுமார்(குன்னூர்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) தனப்ரியா, மணிகண்டன் (வளர்ச்சி), உதவி இயக்குநர்கள் (பேருராட்சிகள்) இப்ராகிம்ஷா (பேரூராட்சிகள்) சாம்சாந்தகுமார் (ஊராட்சிகள்), நகராட்சி ஆணையாளர்கள் காந்திராஜ் (உதகை), பிரான்சிஸ் (கூடலூர்), வட்டாட்சியர்கள் ராஜசேகரன்(ஊட்டி), சிவக்குமார் (குன்னூர்), சித்தராஜ் (கூடலூர்), காயத்ரி (கோத்தகிரி) உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கம்




**ஈரோடு மார்ச்24**
இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் சார்பில் ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கு 'நூலகம் மற்றும் தகவல் அறிவியலில் ஆராய்ச்சி, புதுமை, சமூக ஊடகம் மற்றும் தொழில் நுட்பம்'' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரி தாளார் . பி.டி.தங்கவேல் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் ராமன் கருத்தரங்கினை தொடங்கிவைத்தார்.

வணிக நிர்வாக இளங்கலை துறைத்தலைவர் இணைப் பேராசிரியர் முனைவர். ஜி.மஞ்சு வரவேற்புரையாற்ற, கல்லூரி நூலகர் மற்றும் நூலகத்துறைத் தலைவர் முனைவர். செந்தூர் வேல்முருகன் சிறப்புவிருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் துணை நூலகர் முனைவர் எஸ். தனவந்தன் "சமூக ஊடகமான "வலை ஒளி'' மூலம் நூலக வளங்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துதல்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் டாக்டர். ரங்கநாதன் "திறந்த கல்வி வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் உகந்த பயன்பாடு'' என்ற தலைப்பில் உரையாற்றினார். மூன்றாவது அமர்வில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக நூலகர் முனைவர். கணேசன் "கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்புக்கான சமூக வலைப்பினனல்கள்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். நான்காம் அமர்வில் பூ.சா.கோ. தொழில்நுட்பக் கல்லூரி நூலகர் முனைவர். ஜே. ஆறுமுகம் அதிகத் தெரிவு நிலைக்கான ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு கருவிகள் மற்றும் நுடபங்கள் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இக்கருத்தரங்கின் மூலமாக நூலகம் மற்றும் தகவல் அறிவியலில் ஆராய்ச்சி, புதுமை, சமூக ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் அவசியம் என எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில் தேசிய அளவில் கல்லூரி நூலகர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், அரசு பொதுநூலகத்துறை நூலகர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முனைவர். வேணுகோபால், முனைவர். சரவணன், உதவிப்பேராசிரியர். உதயகுமார், உதவி நூலகள். ந.சுந்தர் மற்றும் நூலக அலுவலர்கள் செய்திருந்தனர். விழாவின் நிறைவாக ஆங்கிலத்துறை பேராசிரியர். முனைவர். கே.பிரபா நன்றிகூறினார்.

## பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆதார் இணைப்புடன் கூடிய வங்கி கணக்கு துவங்க சிறப்பு ஏற்பாடு

### நீலகிரி கலெக்டர் சா.ப.அம்ரித் தகவல்

**ஊட்டி, மார்ச்.24-**
பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு அந்தந்த பள்ளிகளிலேயே ஆதார் இணைப்புடன் கூடிய வங்கி கணக்கு துவங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என நீலகிரி மாவட்ட கலெக்டர் சா.ப.அம்ரித் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலதுறையின் கீழ் 2022-2023-ம் கல்வியாண்டிற்க்கு 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவிதொகை பெற ஏதுவாக, அஞ்சல் துறையின் கீழ் செயல்படும் இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கியுடன் இணைந்து அரசுஃஅரசுஉதவிப்பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு அந்தந்த பள்ளிகளிலேயே ஆதார் இணைப்புடன் கூடிய வங்கி கணக்கு துவங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளதாகவும், இந்த சிறப்பு முகாம்களை பயன்படுத்தி மாணாக்கர்கள், இந்தியாபோஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கிகணக்கு துவங்கி பயன் பெறுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

நீலகிரிமாவட்டத்தில் 193 பள்ளிகளில் சுமார் 4639 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு ஆதார் இணைப்புடன் கூடிய வங்கிகணக்கு இல்லாமல் இருந்ததாகவும், கடந்த 10 நாட்களாக பள்ளிகளில் நடத்தப்பட்ட சிறப்பு முகாம்கள் மூலம் 2209 மாணாக்கர்களுக்கு இந்தியாபோஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி கணக்கு துவங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள மாணாக்கர்களுக்கு வரும் 25ஆம் தேதிக்குள் ஆதார் இணைப்புடன் கூடிய வங்கிகணக்கு துவங்கப்பட வேண்டும.. பள்ளிகளில் நடைபெறும் சிறப்புமுகாம்கள் மட்டுமில்லாமல்,அருகில் உள்ள அஞ்சலகங்கள்ஃதபால்காரர்கிராமஅஞ்சல் ஊழியரை அணுகி இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கிகணக்கு துவங்கலாம். தபால்காரரர் மற்றும் கிராம அஞ்சல் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஸ்மார்ட் போன் மற்றும் பயோமெட்ரிக் சாதனத்தின் மூலம், மாணாக்கர்கள் தங்களின் ஆதார் மற்றும் மொபைல் எண்ணைமட்டும் பயன்படுத்திந-முலுஊ (விரல் ரேகை மூலம் ஒரு சில நிமிடங்களில் இந்தியா போஸ்ட் பேமெண்டஸ் வங்கி கணக்கு துவங்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## துறை அலுவலர்கள் கள ஆய்வின் எண்ணிக்கையினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

### ஆய்வுக்கூட்டத்தில் கலெக்டர் சா.ப.அம்ரித் அறிவுறுத்தல்



**ஊட்டி, மார்ச்.24-**
துறை அலுவலர்கள் கள ஆய்வின் எண்ணிக்கையினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஆய்வுக்கூட்டத்தில் நீலகிரி கலெக்டர் சா.ப.அம்ரித் அறிவுறுத்தினார். ஊட்டியிலுள்ள நீலகிரி மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டத்தில் கலெக்டர் தலைமை தாங்கி தெரிவித்ததாவது:- தமிழக அரசு ஒவ்வொரு மாதமும் துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டு முதல்வர் டாஸ் போர்ட்டுக்கு அனுப்பப்படும் கள ஆய்வு அறிக்கையினை கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே, துறை அலுவலர்கள் கள ஆய்வின் எண்ணிக்கையினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், வருவாய்த்துறையின் மூலம முதல்வரின் முகவரி திட்டம் மலைவாழ் மற்றும் பழங்குடியினரிடமிருந்து சிறப்பு இலக்குப்படை திட்டத்தின் கீழ் நிலுவை மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் சரியான பதில் அளிக்க வேண்டும். மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் மாவட்டத்தில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளை புதுப்பித்தல் மற்றும் நிலுவை இனங்களை பதிவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை, சாலை வசதி உள்ளிட்ட பணிகளை உள்ளாட்சித்துறை அலுவலர்கள் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் டாக்டர்.மோனிக்கா ரானா, மாவட்ட வன அலுவலர்கள் கௌதம் (உதகை), கொம்மு ஓம்காரம் (கூடலூர்), மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி, மகளிர் திட்ட இயக்குநர் பாலகணேஷ், துணை இயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்) அருண்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தனப்ரியா உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கோரிக்கைகளை வலியுறுத்தி வருவாய்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தப்போராட்டம்

### அலுவலக பணிகள் பெரிதும் பாதிப்பு

**ஊட்டி, மார்ச்.24-**
பழைய பென்ஷன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நீலகிரியில் வருவாய் துறை ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டதால் அலுவலக பணிகள் பாதிக்கப்பட்டது.

பழைய பென்ஷன் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். 4 வருடமாக உள்ள துணை கலெக்டர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், பதவியிறக்கம் பெற்ற தாசில்தார் மற்றும் துணை தாசில்தார்கள், முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள் போன்ற பதவிகளுக்கு தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டவாறு பதவியிறக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். வருவாய் துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் முதல் அனைத்து பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வருவாய் துறை ஊழியர்கள் கடந்த பல ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சமீபத்தில் வெளியிடப்பட்ட பட்ஜெட்டில் இது குறித்து எந்த வித அறிவிப்பும் வெளியாகாததால் அரசு ஊழியர்கள் பெரும் அதிருப்தி அடைந்தனர் இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் நேற்று வருவாய்த்துறை ஊழியர்கள் சங்கம் சார்பில் தாசில்தார் வரையுள்ள அனைத்து ஊழியர்களும் ஒரு நாள் திடீர் வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்றது. நீலகிரி மாவட்டத்தில் கலெக்டர் அலுவலகம் உட்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து வருவாய் துறை அலுவலகங்களிலும் ஊழியர்கள் இல்லாததால் அலுவலகம் வெறிச்சோடி காணப்பட்டது

இந்தப் போராட்டத்தின் காரணமாக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள வருவாய் துறை பிரிவில் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வருவாய் துறை சார்ந்த பணிகள் முற்றிலும் முடங்கியதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதுகுறித்து வருவாய் துறை ஊழியர்கள் சங்க தலைவர் சிவக்குமார், பொருளாளர் கந்தசாமி ஆகியோர் கூறியதாவது:-

கடந்த 16.08.22 அன்று வருவாய் துறை அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். மேலும் உடனடியாக வருவாய் துறை ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றால் அடுத்த கட்டமாக மனித சங்கிலி, தொடர் வேலை நிறுத்த போராட்டம் போன்றவற்றில் ஈடுபட உள்ளோம். நேற்று நடந்த போராட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 485 ஊழியர்களின் 222 பேர் கலந்து கொண்டனர் என்றனர்.

## அலங்காரியூரில் புகையிலை மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு முகாம்

**ஈரோடு மார்ச் 24**
ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை ஆரம்ப சுகாதார நிலைய பகுதிக்கு உட்பட்ட சிங்கம்பேட்டை ஊராட்சியில் அலங்காரியூர் பகுதியில் 100 நாள் வேலை வாய்ப்பு உறுதி திட்ட பணியாளர்களுக்கு புகையிலை மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று நடைபெற்றது.

இம் முகாமில் புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள், புற்றுநோய் பாதிப்புகள், புகையிலை தடுப்பு சட்டங்கள், டெங்கு காய்ச்சல் பரவும் விதம், கொசு உற்பத்தியாகும் முறைகள், கொசு ஒழிப்பு வழிமுறைகள், காய்ச்சலுக்கு உடனடி பரிசோதனை மற்றும் சிகிச்சையின் அவசியம், கொரோனா பரவும் விதம், கொரோனா தடுப்பு வழிமுறைகள், தடுப்பூசியின் அவசியம், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் நோக்கம் மற்றும் பயன்கள், ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயின் பாதிப்புகள், சிகிச்சையின் அவசியம் குறித்து விளக்கமாக சுகாதார நலக் கல்வி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் அலுவலக மாவட்ட நலக்கல்வியாளர் சிவகுமார், வட்டார சுகாதாரமேற்பார்வையாளர்(பொறுப்பு) வள்ளி குமார், சுகாதார ஆய்வாளர்கள் ஸ்ரீநாத், ரஞ்சித் குமார் மற்றும் 100 நாள் வேலை வாய்ப்பு உறுதித் திட்ட பணியாளர்கள் 60 பேர் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியாக புகையிலை தடுப்பு மற்றும் டெங்கு தடுப்பு உறுதிமொழிகள் அனைவராலும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

### கடைசி ஒருநாள் போட்டியில்

# பேட்டிங் சரியில்லாததால் தோல்வி: கேப்டன் ரோகித்



**சென்னை, மார்ச் 24-**

கடைசி ஒருநாள் போட்டியில் சரியில்லாத பேட்டிங்கால் இந்தியா தோல்வியடைந்ததாக கேப்டன் ரோகித் சர்மா விளக்கமளித்துள்ளார்.

**ஆஸி., பேட்டிங்....**

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான 3-வது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் பகல்-இரவு ஆட்டமாக நடந்தது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா, 49 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 269 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. தொடர்ந்து விளையாடிய இந்திய அணி, 49.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 248 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் ஆஸ்திரேலிய அணி 21 ரன்களில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இந்த போட்டியில் இந்திய அணியில் அதிகபட்சமாக விராட் கோலி 54 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

**நினைக்கவில்லை...**

இந்த நிலையில் தோல்விக்கு பிறகு பேசிய இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா கூறியதாவது , இது அதிக ரன்கள் (269) என்று நான் நினைக்கவில்லை. 2-வது பாதியில் விக்கெட் கொஞ்சம் சவாலாக இருந்தது. நாங்கள் நன்றாக பேட் செய்ததாக நான் நினைக்கவில்லை. பார்ட்னர்ஷிப் முக்கியமானவை, அதைச் செய்யத் தவறிவிட்டோம். ஒரு பேட்ஸ்மேன் போட்டியை எடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஆனால் நாங்கள் அனைவரும் எங்களால் முடிந்த வரை முயற்சி செய்து கொண்டிருந்தோம்; அது நடக்கவில்லை.

**கற்றுக்கொள்ள...**

இந்த போட்டியில் இருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. அதே போல் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் இருந்து இது வரை விளையாடிய 9 ஒரு நாள் போட்டிகளில் இருந்து எடுத்துக்கொள்ள நிறைய நல்ல விஷயங்கள் இருக்கின்றன. ஆஸ்திரேலியா அணியினர் அபாரமாக செயல்பட்டார்கள். அவர்களின் ஸ்பின்னர்கள் இரண்டு பேரும் நிறைய அழுத்தம் கொடுத்தனர்.'என தெரிவித்துள்ளார்.

# சிகிச்சைக்காக லண்டன் செல்கிறார் ஷ்ரேயாஸ்?



ஐசிசி 50 ஓவர் உலகக்கோப்பைக்கான இந்திய அணியின் திட்டத்தில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளார் நட்சத்திர வீரர் ஷ்ரேயாஸ் ஐயர். பார்டர் கவாஸ்கர் கோப்பையின் போது முதுகுவலியால் பாதிக்கப்பட்ட அவர், பாதியிலேயே வெளியேறினார். மேலும் ஆஸ்திரேலியாவுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இருந்தும் விலகினார். இதனையடுத்து பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இந்நிலையில் ஷ்ரேயாஸ் ஐயர் தனது முதுகுவலி பிரச்சினைக்காக லண்டன் புறப்படவுள்ளார். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெறவுள்ளது. அதன்பிறகு ஷ்ரேயாஸ் ஐயர் குணமடைந்து பழைய ஃபார்முக்கு வருவதற்கு குறைந்தது 4 - 5 மாதங்கள் வரை ஆகும் எனக்கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி மற்றும் ஐபிஎல் தொடர்களில் இருந்து விலகுவது உறுதியாகியுள்ளது.

# ஆசியாவில் 10,000 ரன்களை கடந்த வீரர்: ரோகித் சாதனை



இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3வது ஒருநாள் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய ஆஸ்திரேலியா 269 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அதிகபட்சமாக மிட்செல் மார்ஷ் 47 ரன்கள் எடுத்தார். அடுத்து ஆடிய இந்தியா 248 ரன்களுக்கு ஆல் அவுட்டாகியது. விராட் கோலி அரை சதமடித்து 54 ரன்னில் அவுட்டானார்.

இதையடுத்து, ஆஸ்திரேலியா அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் வென்று, தொடரையும் 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. இந்தப் போட்டியில், ரோகித் சர்மா 17 பந்துகளில் 2 சிக்சர், 2 பவுண்டரி உள்பட 30 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் ஆசியாவில் 10,000 ரன்களை கடந்த 8-வது இந்தியர் என்ற பெருமையை ரோகித் சர்மா பெற்றார்.

### தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும் என்ற

# தமிழக அரசின் கோரிக்கையை நிராகரித்தது சுப்ரீம் கோர்ட்

### பாராளுமன்றத்தில் மத்திய அரசு தகவல்

**புதுடெல்லி, மார்ச் 24-**

சென்னை ஐகோர்ட்டில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை சுப்ரீம் கோர்ட் நிராகரித்துள்ளது என்று பாராளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள ஐகோர்ட்களில் அந்த மாநிலங்களின் மொழிகளை வழக்காடு மொழியாக அறிவிப்பது குறித்து மாநில அரசுகளிடம் இருந்து மத்திய அரசுக்கு ஏதேனும் பரிந்துரை வந்திருக்கிறதா, அப்படி பரிந்துரை வந்திருந்தால் மத்திய அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று மாநிலங்களவை உறுப்பினர் சையத் நசீர் உசேன் மத்திய அரசுக்கு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ள மத்திய சட்டத்துறை மந்திரி கிரண் ரிஜிஜூ, அரசியல் சாசன சட்டம் 348-வது பிரிவு மாநில கவர்னர்கள், ஜனாதிபதியின் ஒப்புதலின் பேரில் ஐகோர்ட்களில் இந்தி அல்லது இதர பிராந்திய மொழிகளை அலுவல் மொழியாக பயன்படுத்த அனுமதிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் அதே சமயம் 1965 ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி, இத்தகைய பரிந்துரைகளின் மீது சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியின் கருத்துக்களை கேட்பது கட்டாயம் என்பது தெரிவிக்கப்பட்டு இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத், மேற்கு வங்காளம் உள்ளிட்ட பல்வேறு மாநில அரசுகளிடமிருந்து அந்தந்த மாநில ஐகோர்ட்களில் தங்கள் மாநில மொழிகளை வழக்காடு மொழியாக அறிவிப்பது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை வந்திருந்தது எனவும் இந்த பரிந்துரை குறித்து சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியின் கருத்துக்களை கேட்டபோது, இந்த பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளிக்கக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டின் முழுமையான அமர்வு முடிவு செய்து இருக்கிறது என தெரிவித்திருக்கிறார்.

ஆனால் தமிழக அரசு மட்டும் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி தன்னுடைய முடிவை மறு ஆய்வு செய்யுமாறும் தமிழக சென்னை ஐகோர்ட்டில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்கும்படியும் மீண்டும் ஒரு பரிந்துரை வழங்கியது என்றும் இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியிடம் கருத்து கேட்டபோது, இந்த பரிந்துரைக்கு ஒப்புதல் அளிக்க கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டின் முழுமையான அமர்வு முடிவு செய்து இருக்கிறது என்று சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பதிலளித்திருக்கிறார் என்று மத்திய சட்டத்துறை மந்திரி தெரிவித்திருக்கிறார்.

### தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்:

# மணிகா பாத்ராவின் பி.எஸ்.பி.பி. அணியை வீழ்த்தியது தமிழ்நாடு



**ஜம்மு, மார்ச் 24-**

நடப்பு தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் தொடரில் மகளிர் பிரிவில் மணிகா பாத்ரா இடம்பெற்று விளையாடி வரும் பெட்ரோலியம் ஸ்போர்ட்ஸ் புரோமோஷன் போர்டு (PSPB) அணியை வீழ்த்தியுள்ளது தமிழ்நாடு அணி. 3-1 என்ற கணக்கில் அரையிறுதியில் இந்த வெற்றியை தமிழ்நாடு பெற்றுள்ளது.

**யாஷினி - கவுஷிகா...**

யாஷினி மற்றும் கவுஷிகா என இருவரும் மணிகா பாத்ரா அணியை வீழ்த்தி தமிழ்நாடு அணியின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக அமைந்தது. அட்டாக்கிங் ஆட்டத்தை ஆடி அசத்தி இருந்தார் கவுஷிகா. அது மணிகா பாத்ராவுக்கு பின்னடைவாக அமைந்தது. 11-8, 9-11, 11-8, 7-11, 11-5 என கவுஷிகா வெற்றி பெற்றார். யாஷினி, ரீத் ரிஷ்யாவை வீழ்த்தினார். அதன் மூலம் தமிழ்நாடு 2-0 என முன்னிலை பெற்றது.

**அர்ச்சனா, காவ்யஸ்ரீ...**

இருந்தும் அர்ச்சனா, காவ்யஸ்ரீயை வீழ்த்தினார். தொடர்ந்து மணிகா பாத்ராவை 11-6, 11-8, 11-8 என வீழ்த்தினார் யாஷினி. இதன் மூலம் 3-1 என தமிழ்நாடு வெற்றி பெற்றது. மற்றொரு போட்டியில் மகளிர் பிரிவில் டெல்லி அணியை வீழ்த்தியுள்ளது ஆர்பிஐ அணி.

# பிராவோவுக்கு விசில் அடிக்க கற்றுக்கொடுத்த தல டோனி

இந்தாண்டுக்கான ஐபிஎல் தொடர் வருகிற 31-ந் தேதி கோலாகலமாக தொடங்குகிறது. இந்த தொடரின் முதல் போட்டியாக குஜராத் டைட்டன்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதுகிறது. இந்த போட்டி அகமதாபாத்தில் நடைபெறுகிறது. இதனால் இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.



சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சமூக வலைதளங்களில் அணி வீரர்களின் பயிற்சி செய்யும் வீடியோ மற்றும் புகைப்படம் வெளியீட்டு வருவது வழக்கமாக வைத்துள்ளனர். இந்நிலையில் நம்ம ஊரு சென்னைக்கு விசில் போடுங்க பாடலுக்கு அணியின் கேப்டனான எம்எஸ் டோனி பந்து வீச்சு பயிற்சியாளரான பிராவோவுக்கு விசில் அடிக்க கற்றுக் கொடுக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதனை சென்னை சூப்பர் கிங்ஸ் ரசிகர்கள் அதிகமாக ஷேர் செய்து வருகின்றனர்.

### மதுபானம் அத்தியாவசிய பொருளா?

# டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஐகோர்ட் கிளை கேள்வி

**விருதுநகர், மார்ச் 24-**

விருதுநகரில் மதுபானக்கடையை அகற்றக்கோரிய வழக்கில் ஐகோர்ட்டு மதுரை கிளை இந்த கேள்வியை எழுப்பியுள்ளது.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலுக்காவில் அமைந்துள்ள வாகைக்குளம் என்ற கிராமத்தில் செயல்பட்டுவந்த மதுக்கடையை அகற்றக்கோரி ஐகோர்ட்டு மதுரை கிளையில் பொதுநல வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டது. அதில், மதுக்கடையை சுற்று பல்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் வசித்துவருவதாகவும், இதனால் மோதல் சம்பவம் ஏற்பட்டு சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.

மேலும், மதுபானக்கடை இருக்கக்கூடிய பகுதி சிறுவர்கள், பெண்கள் அதிகம் சென்றுவரக்கூடிய பகுதியாக உள்ளது. எனவே இந்த மதுக்கடையை அகற்றவேண்டும் எனக்கோரி இந்த வழக்கு தொடுக்கப்பட்டு இருந்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது டாஸ்மாக் தரப்பில், மதுபானக்கடை உரிய அனுமதி பெற்று செயல்பட்டுவருவதாகவும், 20 கிலோமீட்டர் தொலைவுக்கு எந்த மதுபானக்கடைகளும் கிடையாது எனவும் கூறப்பட்டது.

இதற்கு நீதிபதிகள், 20 கி.மீ தொலைவிற்கு ஒரு மதுபான கடைதான் உள்ளது என கூற மதுபானம் பொதுமக்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் பொருளா?'' என கேள்வியெழுப்பினர். மேலும், இந்த வழக்கு தொடர்பாக உள்துறை, கலால் மற்றும் மதுவிலக்கு துறை கூடுதல் செயலர், விருதுநகர் மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது.

### தமிழகத்தை தொடர்ந்து

# விரைவில் புதுச்சேரியிலும் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு தடைச் சட்டம்

**புதுச்சேரி, மார்ச் 24-**

மத்திய அரசு அனுமதி பெற்று ஆன்லைன் விளையாட்டுகளை புதுச்சேரியில் தடை செய்ய விரைவில் சட்டம் கொண்டு வரப்படும் என்று சட்டத்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன் தெரிவித்தார். திமுக கொண்டு வந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை அரசு ஏற்று பாஜக உட்பட அனைத்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன.

புதுவை சட்டப்பேரவையில் ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்களை தடை செய்யும் கவனஈர்ப்பு தீர்மானத்தை கொண்டுவந்து, எதிர்க்கட்சித் தலைவர் சிவா பேசுகையில்: ''சுற்றுலா மற்றும் ஆன்மீகத்திற்கு புகழ்பெற்ற புதுவை மாநிலத்தில் சமீப காலமாக ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு பலரும் அடிமையாகி வருகின்றனர். இந்த விளையாட்டில் இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் மூழ்குவதும், அதன் காரணமாக பணத்தை இழந்து, தற்கொலை முயற்சியில் ஈடுபடும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன. இந்த விளையாட்டுக்களை வீடுகளில் இருந்து தான் விளையாடுகிறார்கள். அதை 'கூகுள் பிளே ஸ்டோர்' மற்றும் 'ஆப்பிள் ஆப் ஸ்டோர்' ஆகியவை தான் கண்டறிய முடியும் என்ற நிலை உள்ளது.

தமிழகத்தில் ஆன்லைன் விளையாட்டால் பணத்தை இழந்த பலர் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து அந்த விளையாட்டை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. தமிழக முதலமைச்சர் ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்கு தடை விதிப்பது குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு தலைமையில் குழு அமைத்தார். அந்த குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் ஆன்லைன் ரம்மி விளையாட்டை தடை செய்வதற்கான சட்டத்தை இயற்றி, அந்த மசோதா ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்களை தடை செய்யும் உத்தரவை மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தில் இருந்து சென்றால் மட்டுமே அந்த விளையாட்டுக்களை தடை செய்யும் நிலை உள்ளது. எனவே புதுவை மாநிலத்திலும் ஆன்லைன் ரம்மி விளையாட்டுக்கு தடை விதிப்பது சம்பந்தமாக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் அதனை அரசின் தீர்மானமாக இயற்றி, ஆளுநர் ஒப்புதலோடு, மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்'' என்றார்.

இதைத்தொடர்ந்து திமுக எம்எல்ஏக்கள் நாஜிம், சம்பத், செந்தில்குமார், கென்னடி ஆகியோரும் பேசினர். தொடர்ந்து பாஜக எம்எல்ஏ கல்யாணசுந்தரம், ''இளைஞர்கள் நலனைக் காக்க ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு தடை அவசியம். இதை அரசு தீர்மானமாக கொண்டுவர பாஜக ஆதரவு தெரிவிக்கும்'' என்றார்.

### தொடர்ந்து 3 ஆட்டங்களில் டக் அவுட்:

# மோசமான சாதனை பட்டியலில் இணைந்தார் சூர்யகுமார் யாதவ்

**சேப்பாக்கம், மார்ச் 24-**

ஹாட்ரிக் டக் அவுட்டால் மோசமான சாதனை பட்டியலில் இணைந்துள்ளார் சூர்யகுமார் யாதவ்.

**கடைசி போட்டி...**

இந்தியா -ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான கடைசி ஒருநாள் போட்டி சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது. இதில், டாஸ் வென்று முதலில் ஆடிய ஆஸ்திரேலியா 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 269 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 270 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி விளையாடியது. முதல் விக்கெட்டுக்கு ரோகித் சர்மா, சுப்மன் கில் இருவரும் இணைந்து 65 ரன்கள் சேர்த்தனர்.

**கோல்டன் டக்...**

ரோகித் சர்மா 30 ரன்களில் ஆட்டமிழக்க, சுப்மன் கில் 37 பந்துகளில் ஆட்டமிழந்தார். விராட் கோலி தன் பங்கிற்கு 54 ரன்கள் சேர்த்துக் கொடுத்தார். ஹர்திக் பாண்டியா 40 ரன்னிலும், ஜடேஜா 18 ரன்னிலும், ஷமி 14 ரன்னிலும் வெளியேறினர். முதல் 2 ஒரு நாள் போட்டிகளில் கோல்டன் டக் முறையில் வெளியேறிய சூர்யகுமார் யாதவ் இந்த போட்டியிலும் கோல்டன் டக்கில் வெளியேறி மோசமான சாதனை படைத்தார். தொடர்ந்து 3 ஒருநாள் போட்டிகளில் கோல்டன் டக்கில் வெளியேறிய 6-வது இந்திய வீரர் என்ற மோசமான சாதனையை இவர் படைத்திருக்கிறார்.

**சச்சின் டெண்டுல்கர்...**

இதற்கு முன்னதாக இந்திய ஜாம்பவன் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் (1994 ஆம் ஆண்டு) ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து 3 முறை டக் அவுட்டில் வெளியேறியிருக்கிறார். அவர் மட்டுமின்றி அனில் கும்ப்ளே (1996 ஆம் ஆண்டு), ஜாகீர் கான் (2003-04), இஷாந்த் சர்மா (2010-11), ஜஸ்ப்ரித் பும்ரா (2017 - 2019) ஆகியோர் 3 ஒரு நாள் போட்டிகளில் தொடர்ந்து 3 முறை டக் அவுட்டில் ஆட்டமிழந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாட்டிலேயே முதல் முறையாக

# ராஜஸ்தான் மாநிலத்தில் சுகாதார உரிமை மசோதா நிறைவேற்றம்

**ஜெய்ப்பூர், மார்ச் 24-**

ராஜஸ்தான் நாட்டிலேயே முதல் முறையாக சுகாதார உரிமை மசோதாவை நிறைவேற்றி அனைவரையும் திரும்பி பார்க்க வைத்துள்ளது ராஜஸ்தான்.

நாட்டின் சுகாதார கட்டமைப்புகளை வலுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தாலும் ஆம்புலன்ஸ் கூட பிடிக்க கூட வசதி இன்றி பல கிலோ மீட்டர் தூரம் கால்நடையாக தோல் மீது சுமந்து செல்லப்படும் உடல்கள். இதுபோன்ற நிகழ்வு இனி எங்கள் மாநிலங்களில் தொடரவே கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் ராஜஸ்தான் அரசு கொண்டு வந்துள்ள மசோதா தான் தற்போது நாட்டையே திரும்பி பார்க்க வைத்துள்ளது.

அனைவருக்கும் கல்வி என்பது போல அனைவருக்கும் சுகாதாரம் என்பது தான் இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கம். கடந்த 2018-ம் ஆண்டு காங்கிரஸ் அளித்திருந்த தேர்தல் வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று. இந்நிலையில் விரைவில் சட்டமன்ற தேர்தலை சந்திக்க இருக்கும் ராஜஸ்தானில் பாஜக-வின் எதிர்ப்பையும், தனியார் மருத்துவர்களின் எதிர்ப்பையும் மீறி இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் இனி அரசு மருத்துவமனை மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகளில் அவசர சிகிச்சைக்கு முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

சிகிச்சை பெற்ற நபரால் ஒருவேளை சிகிச்சைக்கான பணம் திருப்பி செலுத்த முடியாவிட்டால் அரசே அந்த பணத்தை செலுத்திவிடும். கடந்த செப்டம்பர் மாதமே இந்த மசோதாவை சட்டமன்றத்தில் நிறைவேற்ற அசோக் கெலாட் தமையிலான அரசு முயற்சித்தும் மசோதாவில் சில மாற்றங்களை கொண்டு வர வலியுறுத்தி பாஜக-வினர் போர்க்கொடி தூக்கினர். தனியார் மருத்துவமனைகள் கட்டநிலம் வழங்கி இருப்பதை எண்ணி பார்க்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளது ராஜஸ்தான் அரசு.

சிகிச்சை தரம் இருக்கும் தனியார் மருத்துவமனைகளிடம் அபராதம் வசூலிக்கப்படும் என்றும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு தெரிவித்திருப்பதும் மருத்துவர்களின் போராட்டத்திற்கு காரணமாக இருக்கிறது. ஆனால், தற்போது அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ள இந்த மசோதாவை செயல்படுத்துவது தொடர்பான விதிமுறைகள் என்னென்ன என்பது இனி தான் வகுக்கப்பட உள்ளன. ராஜஸ்தானின் இந்த மசோதா ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமாக செயல்படுத்தப்படும் போது அது பல்வேறு மாநிலங்களுக்கு சிறந்ததொரு முன் உதாரணமாக திகழும் என்பதில் மாற்று கருத்தில்லை.

### தோல்வியை மறந்து விடக்கூடாது:

# கேப்டன் ரோகித் - டிராவிட்டுக்கு சுனில் கவாஸ்கர் அறிவுறுத்தல்



**மும்பை, மார்ச் 24-**

தோல்வியை மறந்து விடக்கூடாது என்று ரோகித் சர்மா மற்றும் பயிற்சியாளர் டிராவிட்டுக்கு சுனில் கவாஸ்கர் அறிவுறுத்தியுள்ளார்.

**பீல்டிங்கில் நெருக்கடி...**

ஆஸ்திரேலியாவிடம் தோற்று சொந்த மண்ணில் இந்தியா ஒருநாள் தொடரை இழந்தது தொடர்பாக முன்னாள் கேப்டனும் டெலிவிஷன் வர்ணனையாளருமான கவாஸ்கர் கூறியதாவது:- இந்திய பேட்ஸ்மேன்களுக்கு ஆஸ்திரேலியா பீல்டிங்கில் கடும் நெருக்கடி கொடுத்தது. கோலி-ராகுல், ரோகித் சர்மா-சுப்மன்கில் ஆகியோர் பார்ட்னர்ஷிப்பை தவிர இந்தியாவால் பெரிய பார்ட்னர்ஷிப் அமைக்க முடியவில்லை. இதுதான் தோல்விக்கு காரணமாகும்.

**மறந்துவிடக்கூடாது...**

270 முதல் 300 ரன் இலக்கு இருக்கும் போது 90 அல்லது 100 ரன் பார்ட்னர்ஷிப் அவசியமானது. ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சும், பீல்டிங்கும் மிகவும் நன்றாக இருந்தது. இதுதான் இரு அணிகளுக்கான வித்தியாசமாகும். ஐ.பி.எல். போட்டி விரைவில் தொடங்க இருக்கிறது. இதற்காக அணி வீரர்கள் பிரிந்து விடுவார்கள். இதனால் உலக கோப்பைக்கு முன்பு இந்திய அணி இந்த தோல்வியை மறந்துவிடக்கூடாது.

**எச்சரிக்கையாக இருக்க..**

ஆஸ்திரேலியாவை உலக கோப்பையில் மீண்டும் சந்திக்க நேரிடும். அப்போது இதுபோன்று மீண்டும் நடந்துவிடக்கூடாது என்பதால் கேப்டன் ரோகித் சர்மாவும், பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மேலும் ஒரு பெரிய விவகாரத்தை விரைவில் அம்பலப்படுத்துவோம்

### ஹிண்டன்பர்க் அறிவிப்பால் பரபரப்பு

**புதுடெல்லி, மார்ச் 24-**

அதானி குழும மோசடியை தொடர்ந்து விரைவில் மேலும் ஒரு பெரிய விவகாரத்தை அம்பலப்படுத்துவோம் என்று அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் அறிவிப்பால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் கடந்த ஜனவரி மாதம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் இந்தியாவில் செயல்படும் அதானி குழுமத்தை சேர்ந்த 7 நிறுவனங்கள் தங்களது நிதிநிலையை உண்மைக்கு புறம்பான முறையில் வலுவாக காட்டுவதாகவும், பங்கு சந்தையை ஏமாற்றி லாபம் பார்க்கிறது என்றும் கூறப்பட்டு இருந்தது.மேலும் வெளிநாடுகளில் போலியான நிறுவனங்களை உருவாக்கி சட்ட விரோத பணப்பரிவர்த்தனையில் ஈடுபடுவதாகவும் ஆய்வு அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஹிண்டன்பர்க் அறிக்கையால் அதானி குழுமத்தின் பங்குகள் கடும் சரிவை சந்தித்தன. பொதுத்துறை நிறுவனங்கள் அதானி குழுமத்தில் செய்துள்ள முதலீடுகளால் கடும் இழப்புகளை சந்தித்தன. இந்த சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்த விவகாரத்தை எழுப்பி பாராளுமன்றத்தை முடக்கி வருகின்றன. அதானி குழும முறைகேடு குறித்து பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில் ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் மேலும் ஒரு பெரிய விவகா




முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை வர்த்தக மையத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் எண்மய சேவைகள்துறை சார்பில் நடத்தப்படும் தொழில்நுட்பம், தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு உச்சிமாநாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்த மாநாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் எண்மய சேவைகள்துறை அமைச்சர் மனோதங்கராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக சட்டசபையில் ஓ.பன்னீர் செல்வத்தை பேச சபாநாயகர் அனுமதி அளித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து எடப்பாடி பழனிசாமியும், அவரது ஆதரவாளர்களும் பேசினர். இதையடுத்து சட்டசபையில் கடும் அமளி ஏற்பட்டது.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள், நீர்வளத்துறையின் சாதனைகள் மற்றும் கொள்கை விளக்க குறிப்பு, வரும் 2023-2024-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையில் புதியதாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் ஆகியவை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மனசாட்சியை உறங்க வைத்து விட்டு ஆட்சி நடத்த முடியாது

## சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மார்ச் 24-

மனசாட்சியை உறங்க வைத்து விட்டு எங்களால் ஆட்சி நடத்த முடியாது என்று ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவை தாக்கல் செய்து முதல்வர் பேசினார்.

ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா நேற்று (மார்ச் 23) சட்டப்பேரவையில் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது. இதன்படி, முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவை தாக்கல் செய்து பேரவையில் பேசினார். அதில், "மிகவும் கனத்த இதயத்தோடு இந்த மாமன்றத்தில் நான் நின்று கொண்டு இருக்கிறேன்! இணையவழி சூதாட்டத்தில் ஈடுபட்டு, அதிகப்படியான பணத்தை இழந்ததன் காரணமாக மனமுடைந்து, இதுவரை 41 பேர் தற்கொலை செய்து கொண்ட துயரமான நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறதே என்ற வேதனையோடுதான் எனது உரையை நான் தொடங்குகிறேன்.

சென்னையைச் சேர்ந்த சுரேஷ்குமார் என்ற இளைஞர், ஆன்லைன் ரம்மி சூதாட்டத்தில் 17 லட்சம் ரூபாய் வரை இழந்து, அந்தக் கடனைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். அவர் மரணத்துக்கு முன்னால் ஒரு கடிதத்தையும் எழுதி வைத்து விட்டு, இறந்து போயிருக்கிறார். ''தயவு செய்து ஆன்லைன் ரம்மியை தடை செய்யுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாளுக்கு நாள் இந்த மரணங்கள் நம்முடைய கண்ணுக்கு முன்னால் நடக்கின்றன. இதனைத் தடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் சட்டத்தைக் கையில் வைத்திருக்கக்கூடிய இந்த அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை உணர்ந்துதான், இணையவழி சூதாட்டத்தைத் தடுக்க புதிய சட்டம் இயற்றுவது தொடர்பாக, தமிழ்நாடு அரசுக்கு அறிவுரை வழங்குவதற்காக, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே. சந்துரு தலைமையில் ஒரு குழுவை தமிழ்நாடு அரசின் சார்பில் அமைத்தோம். அரசின் சார்பில் அமைக்கப்பட்ட இக்குழு 27-6-2022 அன்று தனது அறிக்கையினை என்னிடம் வழங்கியது. அந்த அறிக்கை அதே நாளில் அமைச்சரவைக் குழுவின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இணையதள விளையாட்டைத் தடுப்பது தொடர்பாக அரசால் இயற்றப்பட்ட, உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம் குறித்து பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மனநல ஆலோசகர்கள், சமூக ஆர்வலர்கள், இணைய வழி விளையாட்டுத் தொழில் நிறுவனர்கள் ஆகியோரிடம் 7-8-2022 அன்று கருத்துகள் கேட்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் சந்துரு குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையிலும், பள்ளிக் கல்வித் துறையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு அடிப்படையிலும், இணையதள விளையாட்டு உரிமையாளர்கள் மற்றும் இதர தரப்பினரிடையே நடத்தப்பட்ட ஆலோசனையின்படியும், பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், ஒரு வரைவு அவசரச் சட்டம் தயாரிக்கப்பட்டு 26-9-2022 அன்று அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குபடுத்துதல் அவசரச் சட்டம், 2022, கவர்னரால் அக்டோபர் 1, 2022 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இது தமிழ்நாடு அரசின் அரசிதழின் பகுதி IV, பிரிவு2-ல் அக்டோபர் 3, 2022-ல் வெளியிடப்பட்டது. அதன்பிறகு, மேற்கண்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக ஒரு சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டது. அதற்கு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குபடுத்துதல் வரைவு சட்டமுன்வடிவு, 2022 என்று பெயர்.

தமிழ்நாடு சட்டமுன்வடிவு எண்.53/2022 என்ற இந்தச் சட்டமானது கடந்த 19-10-2022 அன்று சட்டப்பேரவையில் உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டு, கவரனரின் ஒப்புதலுக்காக 26-10-2022 அன்று சட்டத் துறையால் அனுப்பப்பட்டது. இதற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்காமல் கவர்னர் 23-11-2022 அன்று சில விளக்கங்களைக் கேட்டிருந்தார். இதையடுத்து அடுத்த 24 மணி நேரத்தில் உரிய விளக்கம் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சட்ட அமைச்சரும் 1-12-2022 அன்று கவர்னரை நேரில் சந்தித்து மீண்டும் விளக்கத்தை அளித்தார்.

ஆனால், சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாவை 131 நாட்கள் கழித்து, சில குறிப்புகளுடன் 6-3-2023 அன்று சட்டப்பேரவைத் தலைவருக்கு, கவர்னர் திருப்பி அனுப்பியுள்ளார். கவர்னர் எழுப்பியுள்ள கேள்விகளும், அதற்கான பதில்களும் அமைச்சரவைக் கூட்டத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு, சட்டமன்றக் கூட்டத்தொடரில் மீண்டும் பரிசீலனைக்கு வைக்கும் கருத்துருவானது அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 2022ம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தை தடை செய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குபடுத்துதல் வரைவு சட்டமுன்வடிவானது உறுப்பினர்களின் பார்வைக்கு மீண்டும் வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் கவர்னர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். இதனை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்தின் ஆளுகை எல்லைக்குள் உள்ள மக்கள் அனைவரையும் ஒழுங்குபடுத்தவும், நெறிப்படுத்தவும், காக்கவும் மாநில அரசுக்கு உரிமை உண்டு, மீண்டும் சொல்கிறேன் மாநில அரசுக்கு அந்த உரிமை உண்டு. மத்திய தகவல் ஒளிபரப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாகூர், தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன் எழுப்பிய கேள்விக்கு, 21-3-2023 அன்று பதில் அளிக்கையில், பந்தயம் மற்றும் சூதாட்டமானது, அரசியல் சட்டத்தின் 7-வது அட்டவணையில் உள்ள மாநில அதிகாரப் பட்டியலின் 34-வது பிரிவில் இடம் பெற்றுள்ளதால் இது தொடர்பாக சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இருக்கிறதென்று மிகத் தெளிவாக பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்.

மனச்சாட்சியை உறங்கச் செய்து விட்டு எங்களால் ஆட்சி நடத்த முடியாது என்பதை பிரகடனமாகவே இந்த மாமன்றத்தில் தெரிவிக்க நான் விரும்புகிறேன். எந்தச் சட்டத்தின் நோக்கமும் மக்கள் நலன் மட்டும்தான். மக்களைக் காப்பது ஒன்றே சட்டத்தினுடைய கடமை ஆகும். தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குபடுத்துதல் வரைவு சட்டமுன்வடிவு, 2022 இம்மாமன்ற உறுப்பினர்கள் முன் வைக்கப்படுகிறது. இனியொரு உயிர் பறிக்கப்படாமல்; இனியொரு குடும்பம் நடுத்தெருவில் நிற்காமல்; இனியொரு நாள்கூட இந்த ஆன்லைன் அநியாயம் தொடராமல் இருக்க அனைத்து உறுப்பினர்களும் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரிக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு முதல்வர் பேசினார்.

# 4 மாநில பாரதிய ஜனதா தலைவர்கள் மாற்றம்

புதுடெல்லி, மார்ச் 24-

ராஜஸ்தான், ஒடிசா, டெல்லி, பீகார் ஆகிய 4 மாநிலங்களில் பாரதிய ஜனதா மாநில தலைவர்கள் அதிரடியாக மாற்றப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு பதில் புதிய தலைவர்களை பாரதிய ஜனதா கட்சி தேசிய தலைவர் ஜே.பி. நட்டா நியமித்து உள்ளார்.

அதன்படி, ராஜஸ்தான் மாநில தலைவராக இருந்து வந்த சதீஷ் பூனியாவுக்கு பதில் சி.பி. ஜோஷியும், ஒடிசா மாநில தலைவராக இருந்த சமீர் மோகண்டிக்கு பதில் மன்மோகன் சமாலும் புதிதாக நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். தலைநகர் டெல்லி மாநில தலைவராக வீரேந்திர சச்தேவாவும், பீகார் மாநில தலைவராக இருந்த சஞ்சய் ஜெய்ஸ்வால் மாற்றப்பட்டு சம்ராத் சவுத்திரியும் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

# பாடகி வாணி ஜெயராம் மறைவு: தமிழக சட்டசபையில் இரங்கல்

சென்னை, மார்ச் 24-

பாடகி வாணி ஜெயராம் மறைவுக்கு தமிழக சட்டசபையில் நேற்று இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

வேலூரைச் சேர்ந்த இசை குடும்பத்தில் பிறந்த வாணி ஜெயராம் 1974-ம் ஆண்டு ஆண்டு வெளியான தீர்க்க சுமங்கலி என்ற படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு பாடகியாக அறிமுகமானார்.

வீட்டுக்குவந்த மருமகள், சொல்லத்தான் நினைக்கிறேன் முதலான படங்களில் பாடியிருந்தாலும் தீர்க்கசுமங்கலி படமே முதலில் வந்ததால், அதில் இடம்பெற்ற இவர் பாடிய பாடலே, முதல்பாடலானது.

தமிழ், தெலுங்கு, கன்னடம் என பல மொழிகளில் கிட்டத்தட்ட 10,000-க்கும் அதிகமான பாடல்களை இவர் பாடியுள்ளார். சிறந்த பாடகிக்கான தேசிய விருதையும் பல்வேறு மாநில அரசுகள் விருதுகளையும் பெற்றுள்ள வாணி ஜெயராமுக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.

இவர் சமீபத்தில் சென்னையில் உள்ள அவரது வீட்டில் தவறி விழுந்து உயிரிழந்தார். இவரது உடல் காவல்துறை சார்பில் 10 காவலர்கள் 3 சுற்றுகளாக 30 குண்டுகள் முழங்க இறுதி மரியாதை செலுத்தப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இந்நிலையில், தமிழக சட்டசபை நேற்று கூடியதும் பிரபல பின்னணி பாடகி வாணி ஜெயராம் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதே போல் மறைந்த முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மாரிமுத்து, தங்கவேலு, சீனிவாசன், முன்னாள் அமைச்சர் உபயதுல்லா ஆகியோரது மறைவுக்கு இரங்கல் குறிப்புகளும் கொண்டு வரப்பட்டன.

இவர்கள் மறைவுற்ற செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவிப்பதாக சபாநாயகர் அப்பாவு கூறினார். மறைந்த உறுப்பினர்களின் மறைவால் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்வதாக கூறி உறுப்பினர்கள் அனைவரும் 2 மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

### கல்விச் சுற்றுலா, பிற நிகழ்வுகளில்

# மாணவர்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை அவசியம்

## கல்வி நிறுவனங்களுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, மார்ச் 24-

கல்விச் சுற்றுலா மற்றும் பிற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் கல்வி நிறுவனங்கள், மாணவர்களின் பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கல்வி நிறுவனங்களுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம், திம்மசமுத்திரத்தில் செயல்பட்டு வரும் தனியார் பொறியியல் கல்லூரியின் NSS சார்பில் கடந்த 2014-ம் ஆண்டு செப்டம்பர் 27ம் தேதி, கூவத்தூர் முதல் தென்பட்டிணம் இடையிலான கடலோர பகுதியில் சர்வதேச கடற்கரை தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மூன்றாம் ஆண்டு மாணவர் மதனகோபால், கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார். கல்வி நிறுவனம், மாநில அரசு, மத்திய அரசு, அண்ணா பல்கலைக்கழகத்தின் அலட்சியத்தால் இறந்த மதனகோபாலின் மரணத்துக்கு, ரூ.25 லட்சம் இழப்பீடு கோரி அவரது தாய் சர்மிளா மற்றும் சகோதரி திவ்யபாரதி ஆகியோர் 2015ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு, மாநில அரசு, மாவட்ட ஆட்சியர் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் தரப்பில், "இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்துவது குறித்து கல்லூரி தரப்பில் தங்களுக்கு தகவல் தெரிவிக்கவில்லை. தகவல் கொடுத்திருந்தால் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும்" என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது தனியார் கல்லூரி தரப்பில், "கடலில் யாரும் இறங்கக் கூடாது என நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 54 மாணவ - மாணவியருக்கும் அறிவுறுத்தல் வழங்கியிருந்தோம். அதை மீறி, மதனகோபாலும், மற்றொரு மாணவரும் கடலில் குதித்தனர். அலையில் சிக்கிய இருவரையும் காப்பாற்ற முயற்சித்தபோது, மதனகோபால் உயிரிழந்து விட்டார். எனவே, இந்த நிகழ்வுக்கு கல்லூரியை பொறுப்பாக்க முடியாது" என வாதிடப்பட்டது.

இந்த வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதி, "மாவட்ட ஆட்சியருக்கு நிகழ்ச்சி குறித்து தெரிவித்து ஒப்புதல் பெற்றிருந்தால், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். 21 வயது மாணவர் உயிரிழந்திருக்கமாட்டார். எனவே, மாணவரின் குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க கல்லூரி நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார். மேலும், கல்விச் சுற்றுலா மற்றும் பிற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும்போது, மாணவர்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கல்வி நிறுவனங்கள் எடுக்க வேண்டும்" என உத்தரவிட்டுள்ளார்.

# இந்தியாவில் பாராளுமன்ற, சட்டமன்ற தொகுதிகள் மறுவரையறை எப்போது?

## பார்லி.யில் மத்திய அரசு பதில்

புதுடெல்லி, மார்ச் 24-

2026-ம் ஆண்டுக்கு பின்னர் நாட்டில் உள்ள பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகள் மறுவரையறை செய்யப்படலாம் என்று மத்திய அரசு விளக்கமளித்துள்ளது.

நாட்டில் உள்ள பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகள் மறுவரையறை செய்யப்படுவது வழக்கம். அந்த அடிப்படையில், 2008-ம் ஆண்டு பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத்தில் உள்ள தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டன. 2008-ம் ஆண்டு தொகுதிகள் மறுவரையறை செய்யும் போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் குறித்தும், தொகுதிகளை மறுவரையறை செய்யும் போது மாநிலங்களுக்கான பங்கு என்ன என்றும், அடுத்த தொகுதி மறுவரையறை எப்போது செய்யப்படும் என்றும் பாரதிய ஜனதா கட்சியை சேந்த ஜி.வி.நரசிம்ம ராவ் என்பவர் மத்திய அரசுக்கு கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த கேள்விக்கு மாநிலங்களவையில் எழுத்து பூர்வமாக பதிலளித்து மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ: தொகுதிகள் மறுவரையறையில் மாநிலங்களுக்கு எந்த விதமான பங்கும் இல்லை என தெரிவித்துள்ளார். அடுத்த மறுவரையறை 2026-ம் ஆண்டுக்கு பின்னர் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படலாம் என சட்டத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ஓ.பன்னீர்செல்வம் பேசியதற்கு...(1-ம் பக்க தொடர்ச்சி

தேர்தல் ஆணையத்திலும் அவர்தான் அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளர் என்ற பதிவு உள்ளது எனக் குறிப்பிட்டார். மேலும் கடுமையாக விமர்சித்தார்.

ஓ. பன்னீர்செல்வத்தை பேச அனுமதித்ததை எதிர்த்து, எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர். வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன் ஆகியோர் இருக்கையை விட்டு எழுந்து செல்லவே, இ.பி.எஸ். ஆதரவு எம்எல்ஏக்களும் இருக்கை விட்டு எழுந்து சென்றனர். அவர்களை கே.பி. முனுசாமி சமாதானப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய சபாநாயகர், பிரதான எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனி சாமி தான், அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. மூத்த உறுப்பினர், முன்னாள் முதல்-அமைச்சர் என்ற அடிப்படையில்தான் ஓ.பி.எஸ்.க்கு அனுமதி வழங்கினேன் என்று தெரிவித்தார்.

அதற்கு பதில் அளித்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, இது மரபை மீறிய செயல் அப்படி ஒரு விதி பேரவையில் இல்லை என்று அவர் குறிப்பிட்டார். இதனால் சிறிது நேரம் சட்டசபையில் சலசலப்பு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்தனர்.